விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 27 சனிக்கிழமை (11.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

### யாழ். நீதிமன்றத் தீர்ப்பால்

## அரசியல் கைதியின் உடல் இன்று நல்லடக்கம்



அனுராதபுரம் சிறைச்சாலையில் சிறை அதிகாரிகளினால் அடித்துக் கொலை செய்யப்பட்ட மரியதாஸ் டெல்றொக்சனின் பூதவுடல் இன்று மாலை 4 மணிக்கு யாழ்.நீதிமன்ற அனுமதியுடனும், யாழ். பொலிஸாரின் பாதுகாப்புடனும் குருநகர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

யாழ்.பொலிஸாரினால் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் குறித்த இளைஞனின் சடலத்தை நேற்றைய தினம் 4 மணிக்கு அடக்கம் செய்யுமாறும் மரண ஊர்வலத்தில் குடும்பத்தினர் மட்டுமே (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதியின் மரணச் சடங்கிலும் பொலிஸார் தலையீடு!

### மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றச்சாட்டு

மரியதாஸ் டெல்றொக்சனின் மரணச் சடங்கை அவரின் குடும்பத்தினர் நடத்துவதிலும் யாழ்.பொலிஸார் தலையிட முயற்சித்ததாக மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இம் மரணச் சடங்கின்போது பெரும் எண்ணிக்கையானோர் திரள்வதை தடுப்பதற்காக நீதிமன்றக் கட்டளையொன்றைப் பெறுவதற்கு பொலிஸார் முயற்சித்ததாக மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள் அமைப்பின் நிறைவேற்றுக் குழு அங்கத்தவர் உதுல் பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

எனினும் அவ்வாறான உத்தரவை விடுப்பதற்கு யாழ்.நீதவான் மறுத்ததுடன், டில்றொக்சனின் குடும்பத்தினர் விரும்பியவாறு இறுதிச் சடங்குகளை நடத்தலாம் என குடும்ப உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியதாகவும் பிரேமரட்ண தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டில்றொக்ஷன் வவுனியா (20ஆம் பக்கம் பார்க்க)

# டெசோ மாநாட்டுக்கு அனுமதி மறுப்பு!

## தமிழக அரசு அதிரடி

(சென்னை), சென்னையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிட்டுள்ள தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பின்(டெசோ) மாநாட்டுக்கு அனுமதி அளிக்கப்போவதில்லை என்று தமிழக அரசின் சார்பில் சென்னை உயர் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் சார்பில் வழக்கறிஞர் நவநீத கிருஸ்ணன் நீதிமன்றத்தில் இந்த தகவலை தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைத் தமிழர் குறித்து இந்.நாடாளுமன்றில் விவாதம்

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் விசேட விவாதம் ஒன்று அடுத்த வாரமளவில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பமாகவுள்ள நாடாளுமன்ற கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் குறித்த விவாதத்திற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)

### தமிழர் பிரச்சினைக்கு மத்திய அரசே காரணம் -விஸ்வ இந்து பரிஷத்

இலங்கையில் தமிழர்கள் பிரச்சினை தீர்க்கப்படாததற்கு இந்திய மத்திய அரசே காரணம் என்று விஸ்வ இந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் குற்றம் சாட்டியுள்ளார்.

திருப்பூரில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அசோக் சிங்கால் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது இலங்கைத் தமிழர் விவகாரம் மற்றும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படும் விவகாரம் உள்ளிட்டவைகள் தீர்க்கப்படாததற்கு இந்திய மத்திய அரசின் அக்கறையின்மையே காரணம் என அவர் கூறினார். (ந-11)

### இலங்கைக்கு உதவ ஐ.நா தீர்மானம்

ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. இலங்கை உள்ளிட்ட 8 நாடுகளின் மனிதாபிமான நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பு 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

### நல்லூர்க் கந்தனுக்கு வட திசையிலும் இராஜகோபுரம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் வடக்கு திசையில் நவதள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்காக நேற்று கார்த்திகைத் திருவிழாவின்போது இராஜகோபுரம் அமையவுள்ள இடத்தில் நவதானியம் விதைக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த வருடம் ஆலயத்தின் தென் திசையில் சண்முகவாசல் நவதள இராஜகோபுரம் நிர்மாணிப்பு பணிகள் நிறைவுற்று கலசாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து ஆலய வடக்குத் திசையில் நவதள இராஜ கோபுரம் அமையவுள்ளது. (ந)

### கருணாநிதியின் டெசோவை கூட்டமைப்பும் புறக்கணித்தது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளும் டெசோ மாநாட்டை புறக்கணிக்க முடிவு செய்துள்ளதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் வலம்புரிக்கு நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. சார்பில் டெசோ மாநாடு நாளை சென்னையில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையிலுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்தோர் பங்கேற்கின்றனர் என்று முன்னர் தொடர்ந்து விளம்பரம் செய்யப்பட்டது.

இந்த நிலையில் இலங்கை அரசு கடந்த 6-ம் திகதி ஓர் அறிக்கை வெளியிட்டது.

அதில் டெசோ மாநாடு இலங்கைக்கு எதிரான விடயம்.அந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் இலங்கை நாட்டினர் கண்காணிக்கப் படுவார்கள் என்று கூறியிருந்தது.

இலங்கை அரசின் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இதேகருத்தை தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்த அறிக்கைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தன் கவலையைத் தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசு கூறியிருப்பது கற்பனையான குற்றச்சாட்டின் அடிப்படையில் புனையப்பட்ட ஒன்றாகும். (20ஆம் பக்கம் பார்க்க)

### காவியுடை பற்றிய கருத்து மன்னிப்புக் கோரினார் அமைச்சர் ஹக்கீம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சில நாட்களுக்கு முன் தனது மாகாண சபைப் பிரசாரத்தின்போது வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பாக மகா சங்கத்திடமும், ஜாதிக ஹெல உறுமயவிடமும் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கல்முனை சாய்ந்தமருதில் அண்மையில் நான் கூறிய கருத்து பௌத்த தலைவர்கள் மற்றும் ஜாதிக ஹெல உறுமய உட்பட பௌத்த குருமார் இடையே மிகவும் கடுமையான விசனத்தை தோற்றுவித்துள்ளது.

இழுத்தடிக்கும் முயற்சிகளில் ஈடுபடாமல் நான் இலங்கையில் உள்ள சகல பௌத்த மக்களிடமும் தயக்கம் ஏதும் இன்றி மன்னிப்புக் கேட்கின்றேன்.

நான் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில் இதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன்.

எனவே இந்த மன்னிப்பை ஏற்றுக் கொள்ளும்படி இலங்கை மகா சங்கத்திடம் விசேடமாக கேட்டுக் கொள்கிறேன்.

முஸ்லிம்களின் மனத்தாங்கல்கள் பற்றி நான் குறிப்பிட்டது (20ஆம் பக்கம் பார்க்க)

### சுப்பிரமணிய சுவாமியின் போக்கு தமிழ் மக்களுக்கு எதிரானதே!

### பிரபா கணேசன் விசனம்



(கொழும்பு)

இலங்கையில் போர் முடிபுற்றதை பற்றியும் எதிர்கால இலங்கையின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் பேசும் சுப்பிரமணியன் சுவாமி யுத்தத்திற்கு பின்னரான இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக எதுவும் பேசுவதில்லை.

இன்று நேற்று அல்ல என்றுமே இவர் தமிழ் மக்களுக்கு எதிரானவர் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன் உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்கையின் பிரச்சினை மட்டுமல்ல இந்தியாவின் பிரச்சினையையும் எமது ஜனாதிபதி தீர்த்து வைத்துள்ளார் என சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் மூலமாக நாட்டில் நிலவிவந்த அமைதியின்மை இன்று (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு புதிய தலைவர் நியமிக்கப்பட்டார்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் சபை பதவி விலகியுள்ளதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக திலக் கொல்லுரே நியமிக்கப்பட்டுள்ளதாக கனியவள அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நால்வர் பதவி விலகியுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கனியவள அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவால் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக சுசந்த சில்வா, ஹேரன்ஸ் விஜயசூரிய, நலின் பெட்கிரிகொரால ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ந-2)

# பணத்தை திருடியவர் விளக்கமறியலில் வைப்பு

(யாழ்ப்பாணம்)

பெற்றோல் நிரப்பு நிலையத்தில் கொள்ளையடித்த நபருக்கு யாழ்.நீதிமன்று விளக்கமறியல் விதித்துள்ளது.

கஸ்தூரியார் வீதியிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் கடந்த 7ஆம் திகதியன்று 15 ஆயிரத்து 500 ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொள்ளையோடு சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் வேலணையைச் சேர்ந்த நபர் ஒருவர் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதவான் மா.கணேசராசா குறித்த நபரினை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ந-4)

# தொழில்நுட்ப கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.முகாமையாளர் சம்மேளனம் நடத்தவுள்ள தொழில்நுட்ப பொருட்களின் பாவனை தொடர்பாக ஆசியநாடுகளின் போக்கு பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சிறப்புப்பேச்சாளராக சிங்கப்பூரில் உள்ள சியஸ்கோ கம்பனியின் உப கம்பனியான அப்பாய்க் கம்பனியின் பிராந்திய முகாமையாளர் தில்லைநாதன் அரவிந்தன் கலந்து கொள்வார் என ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (ந-9)

# உருவச்சிலை திறப்பும் சிறுகதை வெளியீடும்

(அளவெட்டி)

அளவெட்டி அபிவிருத்தி மன்றம் மற்றும் மகாஜன சபையினரின் முயற்சியில் சைவப் பெரியார்-சமூக சேவையாளர் அமரர் செல்லப்பா மயில்வாகனம் அவர்களின் உருவச் சிலை திறப்பு மற்றும் மழலைகள் மகிழ்வகம், இதுவும் ஒரு கதை சிறுகதை தொகுப்பு வெளியீடு என்பன நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணியளவில் மகாஜன சபை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

மகாஜன சபையின் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வலி வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகன், வலி வடக்கு பிரதேச சபை தவிசாளர் திரு.சோ.சுகிர்தன், சேவாலங்கா நிறுவன மாவட்ட நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எஸ்.நகுலேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ந-8)

# நல்லூரில் கைகலப்பு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வெளிவீதியில் நேற்று மாலை குளிர்பான நிலையம் ஒன்றில் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின் போது இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட இரு இளைஞர் குழு வெற்றுகண்ணாடி போத்தல்களால் தாக்கி கொண்டமையாலேயே இளைஞர் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரில் ஓர் இளைஞனின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-4)

# வீதித்திருத்தத்திற்காக வாகனங்கள் மறிக்கப்படுவதால் உயர்தர மாணவர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக வாகனங்கள் மறிக்கப்படுவதால் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நடைபெற்றுக்கொண்டிருக்கும் க.பொ.த.உயர்தர பரீட்சைக்காக தென்மராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பேருந்தில் வரும் உயர் தர மாணவர்களே இவ்வாறு அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

குறிப்பாக மதிய பரீட்சையை எதிர்நோக்கி வருகின்ற மாணவர்கள் வீதி திருத்தப் பணிக்காக சுமார் அரை மணி நேரம் வரை காக்க வைக்கப்படுகின்றனர்.

இதனால் வீட்டிலிருந்து மதியம் 12 மணிக்கு பரீட்சை ஆயத்தங்களுடன் புறப்படும் அவர்கள் பரீட்சை நேரமான 2 மணிக்கு அண்மித்த நேரங்களிலேயே பாடசாலை அடைந்து பரீட்சைக்கான தயார் படுத்தலில் அவதிப்படுகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக வீதித்திருத்தப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என ஆசிரியர்களும் மாணவர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ந-8)

# மின்தடை

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயரழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர் அழுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியிலிருந்து 5.30 மணிவரையும் மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ந-8)

டிஜிற்றல் பனர் பிரிண்டிங்
1 சதுர அடி 30/-
(C-746)
மூர்த்தி டிஜிற்றல்
62/17, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 1358

# அலங்கார உற்சவம்

(சுன்னாகம்)

சுன்னாகம், மயிலணி ஸ்ரீ முத்துமாரி (வடலி) அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ காலத்தில் தினமும் மாலை 3.30 மணி முதல் அபிசேகம், பூஜை, உற்சவம் என்பன நடைபெறும்.

இறுதி நாளான எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் சங்காபிசேகமும் மாலை 5.00 மணிமுதல் பூஜை, ஊஞ்சல் உற்சவம் என்பனவும் நடைபெறும் என ஆலய தேவஸ்தான சபையினர் அறிவித்துள்ளனர். (ந-8)

## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

# யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர்கூடம் புனரமைத்தல் வேலைக்கான கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கேட்போர்கூடம் புனரமைத்தல் வேலைக்காக தகைமை உடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப் படுகின்றன.

01. விலைக் கேள்வியானது தேசியப்போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
02. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
03. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் உதவிமாவட்ட செயலாளர், மாவட்ட செயல்கம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 222 2771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப்பெறலாம் என்பதுடன், பொறியியற் பிரிவு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 15.08.2012 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.
04. ஆர்வமுள்ள விலைக் கேள்வியாளர்களினால் விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பொறியியலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து 15.08.2012 முதல் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
05. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக் குழு மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30.08.2012 திகதியன்று 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வியிலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அன்றைய தினம் கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகைதர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் மணிக்கு திறக்கப்படும்.
06. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
07. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்தில் இருத்தல் வேண்டும்.
08. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கேள்விப்பிணைப் பொறுப்பு இலக்கமிடப்பட்டிருத்தல் வேண்டும். பிணைப் பொறுப்புக்காலம் கேள்வி முடிவுத் திகதியிலிருந்து 90 நாட்கள் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்வி பிணைத் தொகை (ரூ) | மீளளிக் கப்படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JK/ADM/03/Cons. work | யாழ்மாவட்ட செயலககேட் போர் கூடம் புனரமைத் தல்வேலை | 11.494 | 06 மாதம் | C 6 | 115000.00 | 10000.00 |

சுந்தரம் அருமைநாயகம்,
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## போட்டியும் போதை மருந்தும்

ஒரு விளையாட்டுப்போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மைதானத்திலே எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

ஓடுகிற அனைவரும் முதலாவதாக வரவேண்டும்; பரிசைத் தட்டிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

அப்படி ஆசைப்படுவதில் ஒன்றும் பிழையில்லை. ஆனால், குறுக்கு வழியிலே ஓடி அப்படி முதலாவதாக வந்து விட வேண்டும் என்று நினைப்பது பிழைதானே!

சிலபேர் குறுக்கு வழியைக் கடைப்பிடித்து முதலாவதாக வர வேண்டும் என்று முயற்சிப்பார்கள். அது பிழை மட்டுமல்ல; சட்டவிரோதமும் கூட என சொல்லப்படுகிறது.

1960 இலே உரோமபுரியிலே நடந்த ஒலிம்பிக்கில் மிதிவண்டி ஓடும் இளம் விளையாட்டு வீரர் ஒருவர்... போட்டியில் பங்கேற்று ஓடிக் கொண்டிருக்கும்போது திடீரென இறந்து போனார்.

ஏன்? இப்படி ஆகிவிட்டது என்று யாருக்கும் விளங்கவில்லை. அதன்பின் ஆராய்ந்து பார்த்தால், போதை மருந்து சாப்பிட்டதினாலேதான் அப்படி நடந்தது எனக் கண்டு பிடித்தார்கள்.

அதன்பின்னர் விளையாட்டு வீரர்கள் போதை மருந்து உட்கொள்வதைக் கண்டுபிடிக்க ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தார்கள்.

1976 ஆம் ஆண்டில் கனடா நாட்டில் இடம்பெற்ற மாண்ட்ரியல் ஒலிம்பிக்கில்தான் முதல் தடவையாக இந்த ஆய்வுக்குழு ஏற்படுத்தப்பட்டது.

இந்த போதை மருந்தை எப்படி உட்கொள்கிறார்கள்... வாய் மூலமாகச் சாப்பிடுவதும்; மூக்கினாலே நுகர்வதும்; ஊசி மூலமாக உடம்பிலே ஏற்றுவதும், இப்படியாக பல வழிகள் உள்ளன.

வேகமாக ஓடுவதற்கும்; குண்டு எறிவதற்கும்; பளு தூக்குவதற்கும்; நீளம் தாண்டுவதற்கும்; உயரம் தாண்டுவதற்கும்; தசைநார்கள் பெரிதாக வருவதற்கும் அனபாலிக் ஸ்டிராய்ட் (Anabolic Steroid) என்ற மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள்.

இதைவிட இன்னொரு வகை போதை மருந்து உள்ளது. அது கஞ்சா வகையைச் சேர்ந்தது. நீண்ட தூரம் ஓடுபவர்கள் இதை உபயோகிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்டளவு தூரம் நன்றாக ஓடி... அதன்பின் ஓடமுடியாது என்ற நிலையில் இதைப் பாவிக்கிறார்கள். அது அவர்களை இயந்திரம் போல ஓட வைத்து விடும்.

குத்துச் சண்டை வீரர்கள், மல்யுத்தம் புரிபவர்கள் எடையைக் குறைப்பதற்கு "லேசிக்ஸ்" என்ற மருந்தை உபயோகப்படுத்துகிறார்கள்– (சிறுநீர் அதிகம் வெளியேற்றுவதற்கு பயன்படும் வில்லை இது)

வீராங்கனைகள் இந்த அனபாலிக் ஸ்டிராய்டு என்ற மருந்தை உட்கொள்வதால், அவர்களுடைய தசை நார்கள் ஆண்கள் மாதிரி மாறிவிடுகிறது.

இப்படியெல்லாம் இருந்தும் கூட இதனாலே ஏற்படும் பாதிப்புகள் அதிகம். உடம்பு சோர்வடைந்து விடும். பெண்களுக்கு ஆண்கள் மாதிரி குரல் மாறும். முகத்திலே முடி முளைக்க ஆரம்பிக்கும். தலைமுடி உதிரும். பெண்களுக்கு கர்ப்பப்பையிலே புற்றுநோய் ஏற்படும்.

ஆண்களாக இருந்தால் அவர்களுக்கு ஒரு மிருகவெறி உண்டாகிவிடும்– நுரையீரல் புற்றுநோய் ஏற்படும். இதய நோய் வரும்– இரத்தக் கொதிப்பு ஏற்படும்– தலைமுடி உதிர்ந்து தலையில் மொட்டை உருவெடுக்கும்.

அதனால் பரிசு பெற வேண்டுமென்பதற்காகப் பாதை மாறி போவது மிகவும் பிழையான காரியமாகும்.

இப்போதெல்லாம் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களை பரிசோதனை செய்து பார்த்து விடுகிறார்கள்.

ஒரு ஓட்டப்பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது. அதில் வீரர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அனைவரும் பிரபலமான விளையாட்டு வீரர்கள். அதிலே ஒரு வீரன் மட்டும் முதலில் ஓடிக்கொண்டிருந்தான். ஏனையோர் மிகவும் பின்னால் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

முன்னால் ஓடிக்கொண்டிருந்த அந்த வீரன் மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். எல்லோரும் பின்னால் மிகத் தொலைவில் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

அதிலிருந்து ஒருவன் மட்டும் 'விர்' என்று முன்னேறி முதலிலே ஓடி வந்து கொண்டிருந்தவனை நெருங்கி வந்து கொண்டிருந்தான். முதலில் ஓடி வந்து கொண்டிருந்தவனுக்கு சந்தேகம்– பின்னால் வந்தவன் போதை மருந்து சாப்பிட்டிருப்பானோ...

அதுதான் அம்பு மாதிரி ஓடி வந்து விட்டான். ஓடியவாறே அருகில் அவனிடம் நெருங்கி கேட்டான்...;

"ஏம்ப்பா இவ்வளவு வேகமாக வருகிறாய்... அது எப்படி? என்றேன்... அவனும் ஓடி வந்து கொண்டே சொன்னான்; "சேர் அதற்குக் காரணம் நீங்கள்தான். ஏனென்றால்... நான் போட்டியிலே சேர்ந்தவன் இல்லை... சிறிது நேரத்திற்கு முன்பு ஓட்டோகிராப் வாங்கினேன்... எனது போனாவை வாங்கி கையெழுத்துப் போய்விட்டீர்கள்... பின்னர் பேனாவை என்னிடம் திருப்பித் தராமல் உங்கள் கையிலேயே எடுத்துக்கொண்டு ஓடத் தொடங்கினீர்கள். அதை வாங்கிக் கொண்டு போவதற்காகத்தான் உங்களைத் துரத்திக் கொண்டு வந்து கொண்டிருக்கிறேன் என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வீதி அகலிப்பில் சுவீகரிக்கப்படும்
# காணிகளுக்கு நட்டஈடு வழங்குங்கள்
## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீதி அகலிப்பு பணிகள் தொடர்பில் நாளாந்தம் பலதரப்பட்டவர்களினாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

வீதி அகலிப்பு பணிக்கென தனியாரின் காணிகள் சுவீகரிக்கப்படும்போது அதற்கான நட்டஈடு வழங்கப்பட்ட பின்பே வீதி அகலிப்பு பணியை மேற்கொள்ளமுடியும்.

ஆனால், யாழ்.மாவட்டத்தில் அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. இது தொடர்பில் யாரும் கவனம் எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வீதி அகலிப்புப் பணிக்கென கிளிநொச்சியில் பாரியளவில் குழிதோண்டி மண்ணகழ்வு இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இதனால் அப்பகுதியில் பாரியளவில் சுகாதாரச்சீர்கேடு இடம்பெற்று வருகின்றது.

நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான. சூழலாக அப்பகுதி மாற்றம் கண்டு வருகின்றது. இது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டியவர்கள் அதற்கு ஆதரவு தெரிவிப்பது போன்று செயற்பட்டு வருகின்றனர்.

வீதி அகலிப்பு பணிகள் இடம்பெறுவதை அபிவிருத்தியாகக் கருதினாலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் கட்டுப்படுத்தவேண்டியது அவசியமானது. அத்தோடு வீதி அகலிப்புக்கென சுவீகரிக்கப்படும் தனியாரின் காணிகளுக்குநட்டஈடுவழங்கப்பட வேண்டும்எனவும் பாதிக்கப்பட்ட மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ந-6)

# தேசிய கல்வியியற் கல்லூரியின் சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005/2007, 2006/2008, 2007/2009, 2008/2010 ஆகிய கல்வியாண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சி நெறியினை பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் கலையரங்கில் நடை பெறவுள்ளது.

இரண்டு அமர்வுகளாக நடைபெறும் இந்நிகழ்வின் காலை அமர்வில் 2005/2007, 2006/2008 ஆகிய கல்வியாண்டுகளில் பயிற்சியை நிறைவு செய்தோருக்கும் மாலை அமர்வில் 2007/2009, 2008/2010 ஆகிய கல்வியாண்டுகளில் பயிற்சியை நிறைவு செய்தோருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின் காலை அமர்விற்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், மாலை அமர்விற்கு யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகளின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். சான்றிதழ் பெறுவோருக்கான கடிதங்கள் யாவும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரிய கடிதம் தாமதமாக கிடைக்கப்பெற்றவர்களும் கிடைக்கப்பெறாதவர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சான்றிதழ் பெறுவோர் உரிய நேரத்திற்கு வருகை தராதவிடத்து எக்காரணம் கொண்டும் பின்னர் நிகழ்வு நடைபெறும் மண்டபத்தினுள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதனை கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (ந-9)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 75 | 100 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 70 | 65 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 75 | 90 |
| தக்காளி | 60 | 60 | 80 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 35 |
| கோவா | 60 | 70 | 65 | 70 |
| கரட் | 100 | 100 | 110 | 160 |
| பூசணி | 40 | 30 | 45 | 60 |
| புடோல் | 30 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 50-60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 30-60 | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 85 | 80 | 80 | 85 |
| பாகற்காய் | 60 | 70 | 90 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 130 | -- | -- |
| பயற்றங்காய் | 40 | 70 | 70 | 30 |
| லீக்ஸ் | 120 | 130 | 120 | 130 |
| பீற்றூட் | 40-45 | 60 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 70 | -- | 100 |
| முருங்கைக்காய் | 50-60 | 140 | 150 | 100 |
| போஞ்சி | -- | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | -- | 70 | 50 | -- |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 30-90 | 50 | 70 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 20 | 20 | 18-20 |

# இராசி பலன்

11.08.2012
(ஆடி 27, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
நவமி பிற்பகல் 4.29 மணிவரை
கார்த்திகை முற்பகல் 11.05 மணிவரை
இராகுகாலம் 9.04-10.34 மணிவரை
சுபநேரம் 3.04-4.34 மணிவரை

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் மேலாங்கும்.

**இடபம்** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கௌரவமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தாராளமாக செலவு செய்து மகிழ்வீர்கள், எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், சயன சுகக்குறைவான நாள்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பயணங்கள் கைகூடும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிங்கம்** தொழில் விருத்தியுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், சொத்துக்களால் நன்மையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**கன்னி** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு, தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, எடுத்த கருமங்களில் சில தடை, தாமதங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், களஸ்திர நன்மையுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, பண வரவுகள் திருப்தி தரும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**தனுசு** கடன் பிரச்சினையைத் தீர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பீர்கள், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புடன் தொழில் வளர்ச்சி ஏற்படும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும், தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், சுவாரஸ்யமான நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருபக்கம் பௌத்த மதத்திணிப்பு மறுபக்கம் கிறிஸ்தவ மதமாற்றம்

## இடையில் இந்து மதமோ பரிதவிக்கிறது; இந்து மகா சபைத் தலைவர் கவலை




(யாழ்ப்பாணம்)

யுத்த அழிவுகளை எதிர்கொண்ட நிலையில் வறுமையின் பிடியில் அகப்பட்டுள்ளவர்களை கட்டாயத்தின் பேரில் பலாத்காரமாக மதம் மாற்றுவதை தடுப்பதற்கு சிவில் சமூகம் முன்வரவேண்டும் என இந்து மகாசபையின் தலைவர் வைத்தியகலாநிதி இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் சிவில் சமூகங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் பகுதிகளில் தற்போது பௌத்த மதத்தினைப் பரப்புவதற்காக புத்தர் சிலைகளையும் விகாரைகளையும் அமைக்கும் முயற்சியில் ஒரு பகுதியினர் ஈடுபட்டுள்ள நிலையில் மறுபக்கத்தில் மிகவும் வேகமாக இந்துமதத்தவர்களை மதம்மாற்றும் முயற்சியில் கிறிஸ்தவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களிடம் சென்று மதத்தின் பேரால் உதவிகளைச் செய்து கொண்டு மத மாற்றும் நடவடிக்கையில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒருவர் மதம் மாறுவது அவரின் சுயவிருப்பத்தின் பேரிலேயே நடக்கவேண்டும். வறுமையினைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தி மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. இதனைச் சிவில் சமூகம் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

அத்தோடு இந்து மகாசபையில் அங்கம் வகிக்கும் 45 இற்கும் மேற்பட்ட இந்துமதம் சார்ந்த அமைப்புக்களும் இதற்குத் தமது ஆதங்கத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளன.

இந்த மதம் மாற்றும் நடவடிக்கையானது வடக்குக் கிழக்கில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியில் நடந்து கொண்டிருக்கிறது.

மேலும் வழிபாடு செய்யாத இடங்களில் பௌத்த மதத்தினைப் பரப்பும் நோக்கில் அரச மரத்தினை நாட்டுவதும் புத்தர் சிலைகளை நிறுவுவதும் அந்தப் பிரதேசத்திற்கு சாராத சமயத்தைத் திணிப்புச் செய்வதும் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

இவ்வாறான நடவடிக்கை சாவகச்சேரி பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

மேலும் யுத்தம் முடிவிற்குக் கொண்டு வரப்பட முன்பு மும்மொழிக்கொள்கை ஓரளவுக்கு நடைமுறையில் இருந்து வந்தது.

ஆனால் தற்போது தனிச்சிங்களத்தில் கடிதங்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

சிங்களத்தில் அனுப்பப்பட்ட கடிதம் விளங்கவில்லை (புரியவில்லை) என ஆங்கிலத்தில் இன்னொரு கடிதம் அனுப்பினால் மீண்டும் அதற்கான பதிலும் சிங்களத்திலேயே வருகின்றது.

இவ்வாறு பல பிரச்சினைகளை வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

வீட்டுக்காவலில் தடுத்து வைக்கப்படுகின்றனர். எதிர்த்துக்கேட்டால் இடமாற்றம் வழங்கப்படுகின்றது, தமிழர்களுக்கான நியமனம் குறைவு, அலுவலகத்தில் ஆளணிப் பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மதம்சார் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கமுடியாதவாறு ஒருபக்கம் பௌத்த மதத்திணிப்பு, மறுபக்கம் கிறிஸ்தவ மதமாற்றம். இடையில் அகப்பட்ட இந்து மதத்தின் நிலைவரமோ பரிதாபமாகவுள்ளது. எனவே இவற்றைத் தடுப்பதற்கு சிவில் சமூகங்களுக்கான பிரதிநிதிகள் முன்வரவேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனிதவுரிமைக்ள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக் காரியாலயத்தின் இணைப்பாளர் த.கனகராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ந-6)

## சனசமூக நிலையங்களுக்கான நிதியில் பாரபட்சம் காட்டப்படுகின்றதா?

### நிலைய நிர்வாகிகள் கேள்வி

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களினால் இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சனசமூக நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வடமராட்சிப் பிரதேசத்தில் கரவெட்டிப் பகுதியில் ஒரு சனசமூக நிலையத்திற்கு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு தமது நிதியில் இருந்து ஒதுக்கியுள்ளனர்.

கடந்த வருடமும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சில சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்த போதும் மீண்டும் இவ்வருடமும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

வடமராட்சி பிரதேசத்தில் பின்தங்கிய பல சனசமூக நிலையங்கள் கட்டட வசதிகள் இன்றியும் நிர்வாகச் செயற்பாட்டை மேற்கொள்ள முடியாத நிலையிலும் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

இதனை கண்டுகொள்ளாத சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வளர்ச்சி பெற்ற சன சமூக நிலையங்களையே கவனத்தில் கொண்டு தொடர்ந்து நிதிகளை ஒதுக்கி வருவதாகவும் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எதிர்க்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் இருந்து பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய பகுதிகளை இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்ய நிதிகளை ஒதுக்க முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-3-24)




## முகாமையாளர் இல்லை மக்கள் அசௌகரியம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சமுர்த்தி வங்கியில் முகாமையாளர் சமுகம் இன்மையால் பயனாளிகள் பெரும் அசௌகர்யங்களை எதிர்கொள்கின்றனர்.

தற்போது கடமையில் உள்ள முகாமையாளர் தற்காலிகமாக பூநகரியில் கடமையாற்றுவதாக அறிய முடிகிறது.

பூநகரியில் உள்ள வேலைப்பளுவை பூர்த்தி செய்வதற்காக தென்மராட்சி சமுர்த்திப் பிரிவில் இருந்து சில உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக பூநகரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சமுர்த்தி முகாமையாளரின் இடத்திற்கு அதிகாரம் மிக்க பதில் உத்தியோகத்தர் இல்லாமையால் பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனைக் கவனத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-29)





வடமாகாண பிரதம செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாணத்தில் யுனிசெவ் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண பிரதம செயலர் திருமதி. ஆர். விஜயலட்சுமி உரையாற்றுவதையும் யாழ். மாவட்ட யுனிசெவ் தலைமை அதிகாரி மூசா , வடமாகாண திட்டமிடல் செயலர் என். உமாகாந்தன் மற்றும் வடமாகாணத் திணைக்களத் தலைவர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்திரித்து சிதைத்துவிட்டார் மஹிந்த!

## சொந்த மண்ணிலேயே தமிழர்கள் அகதிகளாக நடத்தப்படுகின்றனர்-சீமான் ஆக்ரோசம்



ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சித்திரித்து அதனை ஒழிக்கும் போர் என்று கூறி நமது சொந்தங்கள் ஒன்றே முக்கால் இலட்சம் பேரை இலங்கை அரசு கொன்று குவித்தது.

விடுதலைப்புலிகளை அழித்து விட்டோம், போர் முடிந்து விட்டது என்று கடந்த 2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி அறிவித்தார் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ என்று நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

போர் முடிந்து 3 ஆண்டுகளுக்கு மேலாகியும் போரினால் இடம்பெயர்ந்து சொந்த மண்ணிலேயே அகதிகளாகவுள்ள மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களில் இதுவரை குடியமர்த்தவில்லை. மாறாக தமிழர் வாழ்ந்த பூமியில் 30 வீதத்திற்கு மேல் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து பல்லாயிரக் கணக்கில் சிங்களவர்கள் தமிழர் பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழர்களின் விளை நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இப்படி தமிழீழமே சிங்கள காலனியாக மாற்றப்பட்டு வருகிறது.

இது மட்டுமின்றி போர் முடிந்த பின்னரும் தமிழர்களை ஒடுக்கும் நடவடிக்கைகளை பல்வேறு வகைகளில் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனை பன்னாட்டு மனித உரிமை அமைப்புகள் ஆதாரங்களுடன் வெளியிட்டன.

இதைப்பற்றியெல்லாம் 3 ஆண்டு காலத்தில் வாய் திறக்காத தி.மு.க. தலைவர் கருணாநிதி, டெசோ அமைப்பிற்கு மீண்டும் உயிரூட்டி தமிழீழ விடுதலைக்கு தனது உயிர், பொருள், ஆவி அனைத்தையும் அளிப்பேன் என்றும் தான் மரணிப்பதற்கு முன்னர் தமிழீழம் மலர்வதை பார்க்க விரும்புவதாகவும் கூறினார்.

ஆனால், மத்திய உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் சந்தித்துப் பேசிய பின்னர் ஈழ விடுதலை தொடர்பான தீர்மானம் டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்படாது என்று அறிவித்தார். இப்போது இந்த மாநாடு இலங்கை அரசுக்கு எதிரானது அல்ல என்று கூறியுள்ளார்.

ஈழத்தில் வாழும் நமது சொந்தங்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கும் இன்று வரை இன அழிதலுக்கு ஆளாக்கப்பட்டு வருவதற்கும் இலங்கை அரசு காரணமில்லையா? இன்றைக்கு நீங்கள் ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு என்று நடத்துகிறீர்களே. அப்படியானால் ஈழத்தமிழர்களின் வாழ்விற்கு அந்நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பது தானே பொருள்?

அதற்குக் காரணம் இலங்கை அரசும் அதன் இனவெறி இராணுவமும் தானே? உண்மை இவ்வளவு தெளிவாக இருக்க டெசோ மாநாடு இலங்கை அரசுக்கு எதிரானது இல்லை என்று சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

இந்த டெசோ மாநாடு ஈழத் தமிழரின் விடுதலையையோ அல்லது அவர்களின் நல்வாழ்விற்காகவோ நடத்தப்படவில்லை. அது முழுக்க முழுக்க தி.மு.க.வின் அரசியல் செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்தும் உள்நோக்கம் கொண்ட முயற்சியாகும்.

இதில் ஈழத்தில் இருந்து எவர் கலந்து கொண்டாலும் அது தமிழினத்திற்குச் செய்யும் துரோகமாகவும் சுயநல அரசியலுக்கு துணைபோவதாகவுமே அமையும் என்பதை நாம் தமிழர் கட்சி சுட்டிக்காட்டுகிறது.

எனவே, தமிழினத்தவர் அனைவரும் டெசோ மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. (ந-2)

## இலங்கையர் உள்ளிட்ட புகலிடக்கோரிக்கையாளர்கள் ஆஸி.கடற்படையினரால் மீட்பு



இலங்கையர்கள் உள்ளிட்ட சுமார் 211 புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிச் சென்ற படகொன்றை இந்தோனேஷிய கடற்பரப்பில் வைத்து அவுஸ்திரேலிய கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இந்தப் படகு கடந்த புதன்கிழமை கிறிஸ்மஸ் தீவுகளுக்கு அருகில் வைத்து மீட்கப்பட்டதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ்போவன் நேற்றையதினம் தெரிவித்தார்.

குறித்த படகில் இலங்கை, ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் நாட்டு புகலிடக் கோரிக்கையாளர்கள் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

108 படகுகளில் 7 ஆயிரத்து 364 புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வருடத்தில் அவுஸ்திரேலியாவில் தஞ்சம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## தரம்குறைந்த டீசலினால் அம்புலன்ஸ் வாகனமும் பாதிப்பு

(கொழும்பு)

கேகாலை வைத்தியசாலைக்குச் சொந்தமான 2 புதிய வாகனங்கள் உட்பட 3 நோயாளர் காவுவண்டிகள் தரம் குறைந்த டீசலை பயன்படுத்தியதன் காரணமாக பழுதடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளி ஒருவரை எடுத்துச் சென்றபோது நித்தம்புவ பகுதியில் ஒரு நோயாளர் காவு வண்டி பழுதடைந்தது.

திருத்தம் செய்வதற்காக வாகனங்களை கராஜ்ஜிற்கு கொண்டு சென்றபோது 3 வாகனங்களில் பயன்படுத்திய டீசலின் தரக் குறைவால் இயந்திரம் பழுதடைந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்குச் சொந்தமான 8 நோயாளர் காவு வண்டிகளில் 3 நோயாளர் காவு வண்டிகள் மாத்திரமே அவசர தேவைக்கு தற்போது பயன்படுத்தப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

## மங்கள சமரவீரவின் மனு விசாரணைக்கு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ் வலையமைப்பு மீதான திடீர் சோதனை மற்றும் அதன் பணியாட்களை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்தமை ஆகியவற்றை எதிர்த்து வலையமைப்பின் உரிமையாளரான ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுக்கத்தக்கது என உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் கூறியுள்ளது.

இதன்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, என்.ஜி.அமரதுங்க மற்றும் கே.ஸ்ரீபவன் ஆகியோர் நீதிபதிகள் குழாமில் இருந்தனர். அடுத்த விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி 7 இல் நடைபெறுமென நீதிமன்றம் அறிவித்தது.

இந்த வலையமைப்பின் உரிமையாளரும் ஊழியர்களும் சேர்ந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு 50 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டும் என மனுவில் கேட்டுள்ளனர். (ந-2)

## புகையிலை கடத்திய பெண் கட்டுநாயக்காவில் நேற்று கைது

சென்னையில் இருந்து கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் புகையிலை தூள் கடத்தி வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் இருந்து கட்டுநாயக்க நோக்கி நேற்று வந்த யுஎல் 126 என்ற விமானத்திலேயே குறித்த பெண் புகையிலை தூளை கடத்தி வந்துள்ளார்.

கொலன்னாவ-வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் இருந்து 19 கிலோ 262 கிராம் புகையிலை தூள் மீட்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்கென விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ந-2)

**காணியும் வீடும் விற்பனைக்குண்டு**

மந்திகை உபய கதிர்காமத்தில் மந்திகை- வல்லிபுரக் கோவில் பிரதான வீதி அருகில் 8 1/4 பரப்புக்காணியும் சகல வசதிகளும் அடங்கிய மிகப் பெரிய வீடும் விற்பனைக்குண்டு. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வதியும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

சகல தொடர்புகளுக்கும்:- 021 3735292

சங்கரப்பிள்ளை புஷ்பகுமார்
சம்பந்[illegible] பிரதான வீதி,
கரவெட்டி.

(சி/747)

## "Z" தொடர்பாக மேலும் 5 மனுக்கள்

இசட் புள்ளி கணிப்பீடு தொடர்பாக மேலும் ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் விசாரணைக்கு அனுமதித்தது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட இசட் புள்ளி பட்டியல் தொடர்பாக ஏற்கனவே 33 மாணவர்களின் மனுக்களை கடந்த 6 ஆம் திகதி உயர் நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் ஷிராணி ஏ பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி.அமரதுங்க, கே.ஸ்ரீபவன் ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் மேற்படி மனுக்கள் தொடர்பான வாதங்களை முன்வைப்பதற்கு எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதியை நாள் குறித்தனர். (ந-2)

**YARL Taxi**

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்

021 222 1919

MOB:-0759751919

முதல் Km-60/-

அடுத்த ஒவ்வொரு Km-40/-

முச்சக்கர வண்டி/கார்/வான்

7 a.m-11p.m வரை 7 நாட்களும் சேவை

மலிவானதும் நம்பகமானதுமான சேவை

நட்புடன் உதவும் சாரதிகள்.

(எங்கள் ஓட்டோ எல்லாவற்றுக்கும் கட்டண மீற்றர் பொருத்தப்பட்டுள்ளது.)

36,கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

T.P:-021 222 1919 , 075 975 1919

E.mail:-yarltaxi@gmail.com

(சி/727)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச்சூழலில்...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் மஹோற்சவத்தின் பத்தொன்பதாம் நாளாகிய இன்று சனிக்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவினை பிரம்மச்சாரி யாக்ரத் சைத்தன்ய சுவாமிகள் ஆற்றுவார்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாசாலை, அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தொன்பதாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 7.45 மணி வரை பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாட்டு சிவரூபி ஸ்ரீஜெகநாதன், வயலின் ஏ.ஜெயராமன், மிருதங்கம் எஸ்.துரைராசா,கெஞ்சிரா ஆர்.சிவராமன் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தொன்பதாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை நடைபெறவுள்ளது.

இப்பேருரையில் வீரவாகு தூது எனும் தலைப்பில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா சொற்பொழிவாற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தொன்பதாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் வடக்கு வீதியிலமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை தெய்வீக பேருரைகளும் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் மயில்வாகனன் எனும் தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆற்றுவார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

நல்லூர் முருகன் ஆலய மஹோற்சவத்தின் பத்தொன்பதாம் நாளாகிய இன்று சனிக்கிழமை நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மண்டபத்தில் மாலை 6.45 மணிக்கு லயம் நுண்கலை பயிலகம் வழங்கும் இசைக்கச்சேரி நடைபெறும். (அ-9)

# இலங்கையை இருளில் மூழ்கடிக்க கோடீஸ்வரர்கள் முயற்சிக்கின்றார்கள்

## டீசல் குளறுபடி தொடர்பில் சம்பிக்க குமுறல்

தரம் குறைந்த எரிபொருளை இறக்குமதி செய்து அதனை மின் நிலையங்களுக்கு விற்பனை செய்து பணம் சம்பாதிக்கும் கோடீஸ்வரர்கள் சிலர் உள்ளனர் என்றும் அவர்களில் சிலர் மின்சாரத்தை இல்லாமல் செய்யும் நோக்கில் பணியாற்றுகின்றனர் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று சமூகத்தில் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பவர்களே அதிகமாக காணப்படுகின்றனர். மின்சாரத்துறையிலும் அவ்வாறானவர்களை இலகுவாக இனங்கண்டு கொள்ள முடியும். பல்வேறு சந்தர்ப்பங்களில் தரம் குறைந்த எரிபொருளை இறக்குமதி செய்து அவற்றை மின் நிலையங்களுக்கு நூதனமான முறையில் விற்பனை செய்துள்ள கோடீஸ்வரர்கள் சிலர் இந்த நாட்டில் உள்ளனர்.

மேலும் சிலர் மக்களுக்கான மின்சாரத்தை இல்லாமல் செய்யும் நோக்கில் பணியாற்றுகின்றனர். அரசு என்ற ரீதியில் பொதுமக்களுக்கு மின்சாரத்தை பெறும் உரிமையை உறுதி செய்வதில் நாம் எப்போதும் முன் நிற்போம். மின்சாரம் பெறும் உரிமை பாதுகாத்துக் கொள்ள இந்நாட்டில் உள்ள அனைவரும் முன் வரவேண்டும்.

இந்த நாட்டில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை நடைபெறுகிறது. தேர்தல் நடைபெறுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சிலருக்கு அவர்களுடைய உரிமைகள் ஞாபகத்துக்கு வந்துள்ளன.

இவையனைத்துக்கும் பின்னணியில் தனிப்பட்ட கொள்கை அல்லது அரசியல் கொள்கையே காரணமாகிறது.

நாட்டுக்காக மின்சாரத்தைப் பெறும் உரிமையை பாதுகாத்துக் கொள்வதற்கான அனைவரையும் முன்வருமாறு அழைக்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

# உல்லாசப் பயணிகளின் வருகை 18.5 சதவீதத்தால் அதிகரிப்பு!

## சுற்றுலாத்துறை அமைச்சு தகவல்

இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விடவும் 18.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

இறுதியாகக் கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் 2011 ஆம் ஆண்டு மே மாதத்தை விடவும் 2012 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைக்கு வருகை தந்துள்ள உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 17.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் சுற்றுலா தொடர்பான தரவுகள் அடிப்படையில் 57 ஆயிரத்து 506 சுற்றுலாப் பயணிகள் மே மாதத்தில் வருகை தந்துள்ளதாகவும் மொத்தமாக முதல் 5 மாத ங்களிலும் வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் விகிதாசராம் கடந்த ஆண்டைவிடவும் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 622 ஆகும் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.


ஆகக்கூடிய எண்ணிக்கையான பயணிகள் வழமைபோல் அயல் நாடான இந்தியாவிலிருந்தே வருகை தந்துள்ளனர் எனவும் இதனை அடுத்து இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் கணிசமான அளவினர் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மொத்தமாக 8 இலட்சத்து 55 ஆயிரத்து 975 பேர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டனர். இதன்மூலம் கிடைக்கப் பெற்ற ஆதாயம் 830.3 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

இந்த ஆண்டு சுற்றுலாத்துறை மூலம் ஒரு பில்லியன் டொலர் வருமானம் இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளதோடு ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவார்களென எதிர் பார்க்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவி க்கின்றன். நாட்டில் சுதந்திரமாக நடமாடும் சூழல் உருவாகியுள்ளமை இந்த அதிகரிப்புக்கு காரணம் எனவும் கூறப்பட்டுள்ளது. (ந-2)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பத்தொன்பதாம் திருவிழா



### வேல் கொண்டு வாருமையா!

குன்றிலே குடியிருப்பவனே
குமரனே குகனே
நல்லைப் பதியிலே
வாழ்கின்ற வடிவேலா

அழகுத் தெய்வமே
ஆருயிரும் உனையே
நினைத்துருகி தவிக்கிறது
வேலவனே!
வேல் கொண்டு வாருமையா



*வே.தரணிகா, மருதங்கேணி.*

### வரம் தரும் தெய்வமே

ஆறுபடை வீடு கொண்ட ஆறுமுகத் தெய்வமே
வேறுபடை தேவையற்ற வேலனெனும் தெய்வமே
யாருமற்ற அடியவரை ஆட்கொள்ளும் தெய்வமே
சுறும் வேதப் பொருளாக குளிர்ந்து நின்ற தெய்வமே
தமிழ் வளர்க்கும் இதயத்தில் தான் வளரும் தெய்வமே
உன்னை நாடி வந்தவரை காத்தருளும் தெய்வமே
நல்லையில் அமர்ந்திருக்கும் எம் முருகத் தெய்வமே
நாளும் உனைக் கும்பிடுவேன் நலம் செய் தெய்வமே

*சி.குனேஸ், புளியங்கூடல்.*

### வரமருள்வான் நல்லூர்க்கந்தன்

நல்லூர்க் கந்தனிடம் வாருங்கள்–நம்
தொல்லைகள் எல்லாம் நீக்கிடுவான்
சிந்தையில் தினமும் அவனை நினையுங்கள்
துன்பங்கள் துயரங்கள் எல்லாம் போக்கிடுவான்
குஞ்சரி வள்ளி மணாளன் கையில்
வேலோடு மயிலேறும் அழகைக் காண
நல்லையம் பதிக்கு வாருங்கள்– அவன்
நாளும் நலமருள வேண்டுங்கள்

*ஆர்.ஜே.யாழ்கரன், சித்தன்கேணி.*

### சிந்தை வாழும் முருகா போற்றி

சரவணப் பொய்கையில் உதித்த சண்முகா போற்றி
உமையம்மையின் மைந்தா போற்றி
சூரனை அழித்த சூரசம்காரப் பொருளே போற்றி
பன்னிரு கரம் கொண்ட ஆறுமுகா போற்றி
வள்ளி தெய்வயானை மணவாளக் கந்தா போற்றி
வேலைத் தாங்கிய வேலவா போற்றி
அருணகிரியின் திருப்புகழின் வாழ்வே போற்றி
நல்லை வாழும் அரசே போற்றி! போற்றி!

*ச.சங்கர், யாழ்ப்பாணம்.*

### நல்லூர்க் கந்தனே சரணம்



தித்திக்கும் தேன்தமிழ் மணம் பரப்பும்
நல்லூர் பதியினிலே
அழகு தமிழ் குமரனவன்
சிங்கார முருகனவன்
பழனி மலை வேலனவன்
திருச்செந்தூர் முருகனவன்
வள்ளி தெய்வயானையுடன்
வீற்றிருக்கும் அழகைக் காண
கடல் போல் பக்தர் கூட்டம்
அலையாய் மோதுதப்பா.

*யோ.றோஜினி, யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.*





சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
கண்டி வீதி, சாவகச்சேரி.
சிவகுமரன் என்ரபிறைஸ்
76,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசின் அபிவிருத்தியில் இணைக்கப்பட்ட கிளிநொச்சி வலய பாடசாலைகளின் விபரம்

(சிவநகர்)

அரசாங்கத்தின் ஐயாயிரம் ஆரம்பக்கல்வி பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 13 ஆரம்பக்கல்விப் பாடசாலைகள் 5 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

இதில் கரைச்சிக் கோட்டத்தில் கிளி/மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலை, கிளி/ பாரதிபுரம் ஆரம்பப் பாடசாலை,கிளி/திருவள்ளுவர்ஆரம்பப் பாடசாலை, கிளி/ அக்கராயன் ஆரம்பப் பாடசாலை, கிளி/ இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை என்பனவும் கண்டாவளை கோட்டத்தில் கிளி.தர்மபுரம் இலக்கம் 1 ஆரம்பப் பாட சாலை, கிளி/ கல்மடுநகர் ஆரம்பப் பாட சாலை , கிளி/ கட்டைக்காடு ஆரம்பப் பாடசாலை, கிளி/ தம்பிராசபுரம் ஆரம்பப் பாடசாலை, கிளி/ முருகானந்தா ஆரம்பப் பாடசாலை என்பனவும் பூநகரிக் கோட்டத்தில் கிளி/ முழங்காவில் ஆரம்பப் பாடசாலை, கிளி/ கரியாலை நாகபடுவான் இலக்கம் 3 ஆரம்பப் பாடசாலை என்பனவும் பளைக் கோட்டத்தில் கிளி/ பளை மகா வித்தியாலய ஆரம்பப் பாடசாலை ஆகிய 13 பாடசாலைகளே புனரமைக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்பு வேலைகளில் சுற்று வேலி அமைத்தல், மலசல கூட வசதி ஏற்படுத்தல், வர்ணம் பூசுதல், மின்னிணைப்பு வேலைகள் ஆகிய அத்தியாவசியமான வேலைகள்செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3-254)

# நிதி மோசடி செய்த பெண்ணுக்கு சிறை

(கொழும்பு)

18 பேரிடம் நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொம்பே கனேகொட பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் 18 பேரிடம் ஒரு கோடியே 7 இலட்சத்து 50 ஐம்பதாயிரம் ரூபா நிதி மோசடி செய்துள்ளதாக தொம்பே பொலிஸ் நிலையத்தில் 18 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதனையடுத்து விசாரணை நடத்திய பொலிஸார் பெண்ணை கைது செய்து பூகொட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது அவர் தலா 5 இலட்சம் ரூபா இரு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவருக்கு பிணை வழங்க எவரும் முன்வராத காரணத்தால் அப்பெண் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-8)

# கஞ்சா வைத்திருந்த ஐவர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த ஐந்து நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

யாழ். நகர்ப்பகுதியில் கஞ்சா வைத்திருந்த தென்பகுதியை சேர்ந்த ஐந்து நபர்களை நேற்று முன்தினம் காலை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளார்.

இவர்களை நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார்.

(ந-4)

# கடற்றொழிலாளர் சங்க அலுவலகம் இன்னும் அமைத்துத் தரப்படவில்லை

## காணிகள் இருக்கு; கட்டடம் இல்லை

(ஆனையிறவு)

கரைச்சி வடக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கும் 7 கடற்தொழிலாளர் சங்கஞுக்கும் அலுவலகம் அமைத்து தருவதாக கிளிநொச்சி மாவட்ட நீரியல் திணைக்களத்தினால் கூறப்பட்ட போதும் இதுவரை அதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு அலுவலகம் அமைத்து தருவதாக இவ்வருடத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டு இதற்குரிய அரச காணிகளும் பிரதேச செயலாளரினால் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இக்காணிகளில் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என சங்கப் பிரதிநிதிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ் அலுவலகம் இன்மையால் அலுவலக செயற்பாடுகள் யாவும் வீடுகளில் இடம் பெறுகின்றது.

எனவே, வெற்றுக் காணிகளில் அலுவலகத்தை உடனடியாக அமைத்து அலுவலக செயற்பாட்டை மேற்கொள்ள உரிய தரப்பினர் ஆவன செய்யுமாறு கடற்தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந-3-264)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.08 11

★ 1786-மலேசியாவில் பெனாங்க்கில் கப்டன் பிரான்சிஸ் லையிற் என்பவனால் பிரித்தானியக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.

★ 1804-இரண்டாம் பிரான்சிஸ் அவுஸ்திரேலியாவின் முதலாவது மன்னன் ஆனான்.

★ 1812-இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டது.

★ 1898- அமெரிக்கப் படைகள் புவெர்ட்டோ ரிக்கோவின் மயா கெஸ் நகரினுள் நுழைந்தன.

★ 1920-லாத்வியாவின் அதிகாரத்தை போல்ஷெவிக் ரஷ்யாவிடம் வழங்கும் உடன்பாடு லாத்வியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஏற்பட்டது.

★ 1954-கன்னியாகுமாரி மற்றும் செங்கோட்டை மாவட்டங்களை தமிழ்நாட்டுடன் இணைக்கும் போராட்டத்தில் பங்குபற்றிய 16 தமிழர்கள் பொலிஸாரினால் சுடப்பட்டு உயிரிழந்தனர்.

★ 1960-பிரான்சிடம் இருந்து சாட் விடுதலையை அறிவித்தது.

★ 1965-கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வாட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் 34 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

★ 1968-பிரித்தானியாவின் நீராவித் தொடரூந்து தனது கடைசி பயணிகள் சேவையை நடத்தியது.

★ 1972-வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க தாக்குதல் படையினர் தென் வியட்நாமை விட்டுப் புறப்பட்டனர்.

★ 1975-போர்த்துக்கீசத் தீமோரில் உள்நாட்டுக் கலவரம் ஆரம்பித்ததில் அதன் ஆளுநர் மாரியோ லெமொஸ் பிரெஸ் தலைநகர் டிலியை விட்டுத் தப்பினார்.

★ 1984-வானொலி ஒன்றிற்காக தனது குரலை சோதிப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றேகன் கூறியது எனது சக அமெரிக்கர்களே ரஷ்யாவை அழிப்பதற்கான சட்டவாக்கத்திற்கு இன்று ஒப்புதல் அளித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் குண்டுவீச்சு ஆரம்பமாகும்.

★ 1999- ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழுமையான சூரிய கிரகணம் தென்பட்டது.

★ 2003-ஆப்கானிஸ்தானுக்கு அமைதி காக்கும் படையை நேட்டோ நாடுகள் அனுப்பின.

★ 2003-ஜெமா இஸ்லாமியா இயக்கத் தலைவர் ரிதுவான் இசாமுதின் (ஹம்பாலி) பாங்கொக் நகரில் கைது செய்யப்பட்டார்.

★ 2006- யாழ். குடாநாட்டையும் இலங்கையின் தென்பகுதியையும் இணைக்கும் ஏ9 நெடுஞ்சாலை காலவரையறையின்றி மூடப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1837-மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சு அரசியல்வாதி (இ.1894)

★ 1897-எனிட் பிளைட்டன், எழுத்தாளர் (இ.1968)

★ 1943-பர்வேஸ் முஷாரப், பாகிஸ்தான் ஜனாதிபதி


★ 1959-தர்மரத்தினம் சிவராம், இலங் கையின் பிரபல ஊடகவியலாளர் (இ.2005)

### இறப்புக்கள்

★ 1747-விஜய ராஜசிங்கன்- கண்டி நாயக்க மன்னன்

★ 1890-ஜோன் ஹென்றி நியூமன், ஆங்கிலக் கர்த்தினால் ஆகஸ்போர்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர் (பி.1801)

### ஜோன் ஆபிரகாம்



ஜோன் ஆபிரகாம் கேரளாவில் பிறந்த ஒரு புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர் புனேவில் உள்ள திரைப்படக் கல்லூரியில் ரித்விக் கடக்கிடம் திரைக் கலையினை பயின்றவர். ஒடேஸா இயக்கம் என்ற புதுமையான இயக்கத்தினை தொடங்கியவர். திரைப்பட ஆர்வலர்கள் மூலம் திரைப்படங்களை தயாரித்து மக்களிடம் கொண்டு சேர்ப்பது என்ற கொள்கையோடு ஆரம்பிக்கப்பட்டது ஒடேஸா இயக்கம்.

ஜான் கேரளாவில் மிகவும் புகழ் பெற்றவர். அவருடைய தான்தோன்றித் தனத்தாலும் சக மனிதர்களிடம் கொண்ட அன்பினாலும் மக்களிடம் பெரிதும் அறியப்பட்டவர்.

**திரைப்பங்கள்**

வித்யார்த்திகளே இதிலே இதிலே (1972), அக்ரஹாரத்தில் கழுத்தை (தமிழ்) (1977), செரியாச்சண்டே குரூரகிரதயங்கள் (1979), அம்மா அறியான் (1986) ஆகியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராவிட முன்னேற்ற கழகத்தின் டெசோ மாநாடு ஈழத்தமிழர்களுக்கு நீ(லி)திக் கண்ணீரா?

## நடக்கும் என சாதிக்கிறார் கனிமொழி

(சென்னை)

ஈழத் தமிழர்களுக்கான முன்னெடுப்புக்களை முதல் இயக்கமாகச் செய்ததும் அதை இப்போதுவரை தொடர்வதும் தி.மு.க.தான். இலங்கைத் தமிழர்களை ஆதரித்துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறை ஆட்சியை இழந்தது வரலாறு என கனிமொழி தெரிவித்துள்ளார்.

டெசோ மாநாடு பற்றி விகடனுக்கு கனிமொழி வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கைத் தமிழர்களுக்கான முன்னெடுப்புகளை முதல் இயக்கமாகச் செய்ததும் அதை இப்போது வரை தொடர்வதும் தி.மு.க. தான். இலங்கைத் தமிழர்களை ஆதரித்துப் போராடியதற்காகவே தி.மு.க. இரண்டு முறைய ஆட்சியை இழந்தது வரலாறு.


ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் இலங்கை என்கிற வார்த்தையைக் சொல்லக்கூடப் பயந்து ஒளிஞ்சவங்க இப்போ தலைவர் கலைஞரை நோக்கி விரல் நீட்டிப் பேசுறாங்க.

இலங்கைத் தமிழர்கள் குறித்துப் பேசுவதற்காகன களமும் தளமும் திரும்ப அமைந்தது தி.மு.க. ஆட்சியில்தான். தலைவர் கலைஞர் எது செய்தாலும் குற்றம் சாட்டுபவர்கள், நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ் ஈழத்தை உருவாக்கிக் காட்டுவேன் என வாக்குறுதி கொடுத்தவர்களை ஏன் மறந்து விட்டாங்க?

போர் என்றால் மக்கள் சாகத்தானே செய்வார்கள் மனசாட்சியே இல்லாமப் பேசினவங்களைக் கேள்வி கேட்க ஏன் ஆளே இல்லையா? எல்லாப் பிரச்சினைகளுக்கும் தலைவரை மட்டும் விமர்சிப்பவர்கள் கிட்ட இப்போ ஆட்சியில் இருப்பது தலைவர் கலைஞர் இல்லை யாராவது எடுத்துச் சொன்னா நல்லா இருக்கும்.

ஆட்சியில் இருந்தபோது தி.மு.க. என்னங்க செய்யலை? போர் நிறுத்தம் ஏற்படுத்துவதற்கும் பேச்சுவார்த்தை ஏற்படுத்துவதற்கும் தலைவர் எவ்வளவு பாடுபட்டார் அந்த முயற்சிகளை பாழாக்கினவங்களுக்கு நல்லாத் தெரியும்.

தி.மு.க. மட்டுமே அத்தனை விமர்சனங்களுக்கும் பதில் சொல்லுதுங்கிற ஒரே காரணத்துக்காக குறை கூறுவதை மட்டுமே முழு நேர வேலையா சிலர் வெச்சிருக்காங்க. இன்னைக்கு யார் வேணும்னாலும் பிரபாகரன் என்கிட்ட அதைச் சொன்னார்... இதைச் சொன்னார் கற்பனைகளைப் பரப்பலாம். அதை எல்லாம் ஏன் அவங்க அன்னைக்கே சொல்லலை?



போர் முடிந்த பின்னர் அங்கு ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்கள் மூலமாகத்தான் அங்கு இருக்கும் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச நன்மையைக்கூடச் செய்ய முடியும். அந்த நோக்கத்தில் அவர்களை சந்திக்கப்போனால்... அதற்கும் அடுக்கடுக்காக விமர்சனங்கள்.

ஒருவேளை எங்களை மட்டுமே விமர்சிக்கிறவங்களுக்கு ஜெயலலிதாவின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கின்றனவோ என்னவோ? இன்னைக்கும் இலங்கைத் தமிழர்கள் கஷ்டப்பட்டுட்டுத்தானே இருக்காங்க...

அவங்களுக்கு நல்ல வாழ்க்கைக்கான உத்தரவாதம் அளிக்க ஜெயலலிதா என்ன செஞ்சாங்க? குறைந்த பட்சம் இதைப்பற்றி மத்திய அரசிடம் பேசக்கூட இல்லை. எந்தச் சூழலிலும் எதற்காகவும் ஜெயலலிதாவை விமர்சித்துவிடக்கூடாது என்று நினைக்கிறவங்க தான்தலைவர்கலைஞரை விமர்சிக்கிறாங்க.

காரணம் கலைஞரை விமர்சிச்சா பதில் வரும்... அம்மையாரை விமர்சிச்சா வழக்கு வரும். இலங்கைத் தமிழர்களின் துயரங்களை யார் அரசியலாக்கினாலும் அது அநாகரிகம். இங்கே இருக்கிற தமிழர்களைத் கைதட்ட வெச்சாலோ உசுப்பேத்தினாலோ அங்கே இருக்கிற தமிழர்களுக்கு எந்த நல்லதும் நடக்காது!

தனி ஈழக் கோரிக்கையைக் கைவிட்டுட்டதா கலைஞர் எப்பவுமே சொல்லலை. இலங்கைத் தமிழர்களுக்கான இப்போதைய தேவை... அடிப்படை உரிமைகளும் வாழ்வாதாரங்களும். அதுக்கு ஒரு தீர்வு கிடைச்ச பிறகே தனி ஈழக் கோரிக்கை சாத்தியம்.

எதை எப்போ வலியுறுத்தணும் கலைஞருக்குத் தெரியும். எனக்குத் தெரிஞ்சு டெசோ மாநாடு குறித்து காங்கிரஸ் தலைவர்கள் யாருமே தி.மு.க. கிட்ட பேசலை. மிரட்டலுக்குப் பின்வாங்கியதா சொல்வது கற்பனை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

## டெசோ மாநாட்டில் ஈழம் என்ற சொல்லை அகற்றினால் இந்திய அமைச்சின் அனுமதி கிடைக்கும்

(கொழும்பு)


தமிழ் ஈழத்திற்கு ஆதரவு வழங்கும் அமைப்பு என்னும் கருணாநிதியின் டெசோ அமைப்பு தனது பெயரிலிருந்து ஈழம் என்ற சொல்லை அகற்றினால் மட்டுமே மேற்படி மாநாட்டிற்கான இந்திய உள்துறை அமைச்சின் அனுமதி கிடைக்கும்.

ஆனாலும் அரசியல் ரீதியாக பார்க்கையில் மேற்படி மாநாட்டை வெளிநாட்டு பிரதிநிதிகளை அழைத்து நடத்துவதில் இந்திய அரசுக்கு ஆட்சேபனை எதுவுமில்லை.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பாக இந்திய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதிச் செயலாளர் ஆர்.கே.நாக்பாலினால் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான அங்கீகாரம் என்ற தலைப்பில் மேற்படி கடிதம் டெசோ அமைப்பின் செயலாளர் ஹசன் மொகமெட் ஜின்னாவின் பெயருக்கு, கலைஞரின் அண்ணா அறிவாலயம் என்னும் விலாசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி கடிதம் 9 ஆம் திகதியில் அனுப்பப்பட்டபடியால் மேற்படி மாநாட்டை நடத்துவதில் கலைஞர் கருணாநிதியும் என்னென்ன சவால்களை எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். (ந-2)



வட்டக்கச்சி இலவச ஆயுர்வேத வைத்தியசாலைக்கு அப்பிரதேசவாசியொருவரால் ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் வைத்திய அதிகாரி டாக்டர் ப.தவகீர்த்தனிடம் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## இசட்புள்ளி பிரச்சினைக்கு நீதிமன்றின் ஊடாகவே தீர்வு

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இசட் புள்ளி பிரச்சினைக்கு நீதிமன்றின் ஊடாகவே தீர்வு காண அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இசட்புள்ளி பெறுபேறு விவகாரம் பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு தரப்பினர் நியாயம் வேண்டி நீதிமன்றின் உதவியை நாடியுள்ளனர்.

இதனால் இந்தப் பிரச்சினைக்கு நீதிமன்றம் ஓர் உதவியை வழங்கும் என எதிர்பார்க்கின்றேன். எனினும், பாதிக்கப்படும் மாணவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் திருப்தி அடைய முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (ந-2)

## பூரணமான அளவில் மின்சாரம் இல்லை!

### கிடைத்தும் பயனில்லை என மக்கள் விசனம்

(புளியம்பொக்கணை)

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு வரை மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் மின்சாரத்தின் அளவு போதாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

நவீன மயப்படுத்தப்பட்ட இக்காலத்தில் மின்சாரத்தின் ஊடாகவே அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் வேலை செய்யும் பெரியவர்கள் வரை மின்சாரம் இன்மையல் எதையும் பூரணமாகச் செய்து முடிக்க முடியாத நிலை உள்ளது.


ஆனால், இங்கு மின்சாரம் வழங்கப்பட்ட போதும் மின்சாரத்தின் அளவு குறைவாகக் காணப்படுகின்றமையால் மின்சாரப் பயன்பாட்டை முழுமையாகப் பெறமுடியாத நிலை உள்ளது.

எனவே, உரிய அதிகாரிகள் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து மின்சாரப் பயன்பாட்டை முழுமையாகப் பெற ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

05




கி.பி 1 ஆம் நூற்றாண்டிற்குரிய - திராவிடர்களது கல்வெட்டு என்று கருதப்படுவது-மலைகளுக்கு நடுவே கோயிலும் கீழே யானையும் காணப்படுகிறது



செங்கை ஆழியான்

## இலங்கையின் ஆதிக்குடிகளும் ஆரம்பக் குடியேற்றங்களும்


1. இந்தியாவில் லாலா என்ற நாட்டினை ஆட்சிசெய்த சிங்கபாகு என்பவனுக்கும் சிங்கசீவிலி என்பவளுக்கும் பிறந்த இரண்டு புதல்வர்களில் ஒருவன் விஜயன், மற்றவன் சுமித்தன். விஜயன் துட்டனாகவும் லாலா நாட்டு மக்களுக்கு பல துயரங்களை விளைவிப்பவனாகவும் இருந்தான். அதனால் அவனையும் அவனது 700 தோழர்களையும் கப்பலிலேற்றி நாடு கடத்திவிட்டான். இவர்கள் இந்தியாவின் மேற்குப் பிரதேசத்திலிருந்து புறப்பட்டு, மாதோட்டத்தைச் சுற்றி இலங்கையின் வடமேற்குப் பகுதி




யில் (புத்தளம்) தம்பபண்ணி என்ற தாமிரபரணி என்ற இடத்தை வந்தடைந்தனர்.[39] இக்குடியேற்றம் நாம் இலக்கியச் சான்றொன்றின் மூலம் அறியக் கிடைக்கின்றது. விஜயனின் அமைச்சர்கள் பல்வேறு பிரதேசங்களில் குடியேற்றங்களை உருவாக்கிக் கொண்டனர். அனுராதா என்பவன் கதம்ப நதியின் கரையில் அநுராதக் கிராமம் என்பதை அமைத்தான். உபதீசன் என்பவன் உபதீசகமம் என்றொரு கிராமத்தை காம்பிரா நதிக் கரையோரத்தில் உருவாக்கினான். அனுராதபுரத்துக்கு வடக்கே உப தீசகமம் அமைந்தது. உஜ்ஜனி, உருவெல, விஜித்தா, ஆகியவர்கள் தத்தம் பெயர்களில் உஜ்ஜினிகமம், உருவெலகமம், விஜிதகமம் ஆகிய குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டனர்.[40]

2. விஜயன் இலங்கையின் முதலாவது மன்னனாக முடிபுனைந்து கொள்ளும் முன்னர் தென்னிந்தியாவிலிருந்து தனது அரசியாக பாண்டிய இளவரசி ஒருத்தியையும் தனது 700 தோழர்களுக்கும் 700 பாண்டிய நாட்டுக் கன்னிகளையும் வரவழைத்துக் கொண்டதாக மஹாவம்சம் தெரிவிக்கின்றது. அவர்களோடு பதினெட்டுத் தொழில்சார் விற்பன்னர்கள்கொண்ட ஆயிரம் குடும்பங்களும் அவர்களுக்கான அடிமைகளும் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் அனைவரும் மகாதீர்த்தத் துறையில் (மாந்தைத்துறைமுகம்) வந்திறங்கினர்.[41]

3. இலங்கையின் முதலாவது மன்னன் விஜயன், சந்ததியில்லாமல் மரணமடைந்தமையால் இராட்சியத்தினைப் பொறுப்பேற்க, லாலா நாட்டிலிருந்து பாண்டுவாசுதேவன் என்பவன் தனது அமைச்சர்களின் புத்திரர்கள் 32 பேரோடும் பரிவாரங்களோடும் மரக்கலங்களில் புறப்



கி.பி 4-8 ஆம் நூற்றாண்டிற்குரிய ரோமன் நாணயங்கள் இலங்கையில் மீள ஆக்கப்பட்டது

பட்டு, கோணகமாகாத்துறையை வந்தடைந்தனர்.[42]

4. பத்தகச்சானா என்ற இளவரசி தனது தோழியர் 32 பேருடன் மரக்கலமேறி திருகோணமலைக் கோகர்ணத்துறைமுகத்தை வந்தடைந்தாள்.

5. பத்தகச்சானாவின் சகோதரர்கள் அடுத்து இலங்கைக்கு வந்தனர். அவர்கள் இலங்கையைச் சுற்றிப் பார்த்து தாம் குடியேறக்கூடிய கிராமங்களை உருவாக்கிக்கொண்டனர். இராமா என்ற இளவரசன் குடியேறிய கிராமம் இராமகோனா எனப்பட்டது. விஜித் தன் என்பவன் உருவாக்கிய கிராமம் விஜிதகமம் என்றும், தீக்காயு என்ப வன் உருவாக்கிய கிராமம் திக்காயு என்றும், ரோகண என்பவன் உருவாக் கிய கிராமம் ரோகண என்றும் அழைக் கப்படலாயின[43]

6. தேவநம்பிய தீசன் காலத்தில் இலங்கைக்கு மகிந்த தேரரும் அவரது குழுவினரும் வருகை தந்தனர். பௌத்தமதத்தினை முதன்முதல் இந்த நாட்டில் பரப்பிவைத்த பெருமை இவர்களையே சாரும்.

7. புத்தகாயாவிலிருந்து புனித வெள்ளரசின் கிளை ஒன்றினை எடுத்துக் கொண்டு சங்கமித்ததேரி தனது பரிவாரங்களுடன் இலங்கைக்கு வந்தார். அவர் வடக்கே ஜம்புக் கோளத்துறையில் (காங்கேசந்துறை) வந்திறங்கினார்.[44]

ஆரியருடைய இலங்கைக் குடியேற்றங்களை விபரிக்கும் மரபுக் கதைகள் மேலே தரப்பட்டுள்ளன. இவற்றின் மெய்ம்மை நம்பிக்கைக் குரியதல்ல என்றாலும், அலையலையாக இலங்கையில் ஆரியக்குடியேற்றம் நிகழ்ந்தமையை இந்த மரபுக் கதைகள் விபரிக்கின்றன. *இந்தியாவில் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டிருந்த ஆரியரில் சில பிரிவினர் இலங்கைக்கு வந்து குடியேறினர். அவ்வாறு குடியேறியவர்களின் சந்ததியினரே சிங்கள மக்களாயினர்.* ஆரியர்கள் இந்தியாவின் மேற்குப் பிரதேசங்களிலிருந்து வந்தார்களா, இந்தியாவின் கிழக்குப் பிரதேசங்களிலிருந்து வந்தார்களா என்று ஆராய்வது அவசியமற்ற கூற்றாகும். ஆரியர்கள் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தனர். பௌத்தம் தழுவிய வணிகர்கள், இலங்கையின் சிறப்பினை கண்டு இங்கு குடியேற்றங்களை நிறுவிக் கொண்டனர். விஜயனுக்குப் பதில் சிங்ஹல என்பவன் இரத்தினத் துவிபத்தை நிறுவியதாக ஒரு மரபுண்டு.

ஆரியர் இலங்கைக்கு வருகை தந்தபோது இயக்கர் குடியிருப்புக்கள் தென்னிலங்கைப்பகுதிகளிலும் நாகர் குடியிருப்புக்கள் வட இலங்கையிலும் கூடுதலாகப் பரவியிருந்தன. முக்கியமான இயக்கர் குடியிருப்புக்கள் பொம்பரிப்பு, கோகர்ணம்-அரித்தகிரி-யக்குரல்ல பகுதிகளிலும் சிறீஸ்தவத்துவைச் சூழ்ந்த மகியங்கனை, விந்தனை, லக்கல பகுதிகளிலும் அமைந்திருந்தன. தாமிரபரணிப் பிரதேசத்தில் காணப்பட்ட இயக்கர் குடியிருப்புக்களிடையே தென்கரையோரத்தில் கல்யாணியிலிருந்து நாகர்கோயில், நாகதுமை, நாகர்முனை, நாகன்சாலை, திரிகூடம் ஆகிய பிரதேசங்களில் நாகர் குடியிருப்புக்கள் காணப்பட்டன. இலங்கையின் வடபிரதேசமான நாகதீபத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு, நாகபடுவான், குருவிந்தன் குளம், பாலிவாபி, மகாதீர்த்தம், மகாவில்லாட்சி ஆகியவை நாகர் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன. ஆரியக் குடியிருப்புக்கள் நிகழத் தொடங்கியதும் கதம்பநதிப் பிரதேசம், தென்பகுதியில் கஜரகமப்பிரதேசம் மகாவலியின் கழிமுகப்பகுதி தும்பறைப் பள்ளத்தாக்குப் பிரதேசம் என்பன முக்கியமான குடியேற்றப் பகுதிகளாக விளங்கின. கி. மு. 5 ஆம் நுற்றாண்டுக்குப் பின்னர் இலங்கையில் நாகதீபம், தாமிரபரணி, மலையதேசம், கோகர்ணம், கஜரகமம் என்ற ஐந்து தெளிவான பிரதேசங்களை காணமுடிந்தது. இவற்றில் நாகதீபம் கல்யாணி என்பன முற்றாகத் திராவிடக் குடியிருப்புக்களாக விளங்கின. தாமிரபரணி, நாகபர்வதம் தவிர்ந்த மலையதேசம், நாகதுமை, நயிமானை தவிர்ந்த கஜிரகமம், நாகர்முனை, நாகன்சாலை தவிர்ந்த கோகர்ணம் என்பன ஆரியக் குடிருப்புகளாக விளங்கின.[9]




மிகப்பழமை வாய்ந்த இந்திய-இலங்கை-ரோமன் நாணயம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக மக்கள் முன்னணி டெசோ மாநாட்டில் கலந்து கொள்ளாது

## மனவருத்தத்துடன் மனோ கணேசன் அறிவிப்பு



(கொழும்பு)

சென்னையில் நாளை நடைபெறவுள்ள டெசோ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொண்டு அந்த மாநாட்டில் கலந்து கொள்வது இல்லை என்ற முடிவை ஜனநாயக மக்கள் முன்னணி எடுத்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் ஊடக செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழுக் கூட்டம், முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தலைமையில் நேற்று முன்தினம் கொழும்பில் கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

அரசியல்குழு உறுப்பினர்களுடன் கட்சியின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபுகளை அறிவிக்கும் முகமாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக அமைப்புகளின் எல்லாவித நடவடிக்கைகளுக்கும் இலங்கையில் தமிழரை கொடும் ஆட்சிக்கு உள்ளாக்கி இருக்கும் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றன என்பதை நாம் அறிவோம்.

எனவே, தமிழக மற்றும் இந்திய அரசியல் கட்சிகளின் இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை விமர்சனம் செய்வது இல்லை என்பது நமது கட்சி தொடர்ந்து கடைப்பிடிக்கும் நிலைப்பாடு ஆகும்.

மேலும் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி தொடர்பிலும் உலகத் தமிழ் அரசியல் பரப்பில் திராவிட முன்னேற்ற கழகம் வகிக்கும் பாத்திரம் தொடர்பிலும் நாம் நல்லெண்ணங்களை கொண்டுள்ளோம்.

எனினும் போர் நடைபெற்ற காலத்தில், ஆட்சியிலிருந்த தி.மு.க. அரசின் நடவடிக்கைகள் தொடர்பிலும் தற்போதைய போருக்கு பிந்திய இந்த காலகட்டத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் பயன்பாடு குறித்தும் பாரிய முரண்பாடுகள் எழுந்துள்ளன. இவை பற்றி நாம் விரிவான பகிரங்க விவாதங்களை நடத்த விரும்பவில்லை. எனினும் இவை தொடர்பில் எமது அரசியல் குழுவில் விரிவாகவும் கவனமாகவும் ஆய்வு செய்த நிலையில் மிகுந்த மன வருத்தத்துடன் எமது இந்த முடிவை நாம் எடுத்துள்ளோம்.

அதேவேளையில் இலங்கை தமிழர்களது தேசிய பிரச்சினை தொடர்பில் தமிழகத்தின் அனைத்து கட்சிகளும் கூட்டாக ஒரு தேசிய மாநாட்டை நடத்த வேண்டும் என்பதை நாம் வலியுறுத்துகிறோம்.

அதன் மூலம் தமிழகம் தனது ஒருமித்த குரலின் மூலமாக இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் இலங்கை தமிழ் உடன்பிறப்புகளுக்கு ஆதர வாகவும் இந்தியாவின் மனசாட்சியையும் உலகத்தின் மனசாட்சியையும் தட்டி எழுப்ப வேண்டும்.

அந்த ஒரு செயற்பாட்டில் தமிழகத்தின் மாணவர், இளைஞர் மற்றும் சமூக அமைப்புகளும் உள்வாங்கப்பட வேண்டும்.


இத்த கைய ஒரு அனைத்து கட்சிகளின் அமைப்புக்களின் மாநாடு தமிழகத்தில் ஏற்பாடு செய்யப்படுமானால் அதில் நமது கட்சி உட்பட அனைத்து இலங்கை தமிழ் கட்சிகளும் மகிழ்ச்சியுடன் பங்கு பற்றும் சூழல் ஏற்படும் என நாம் அறிவிக்க விரும்புகி றோம்.

இலங்கையில் வாழுகின்ற தமிழர்களின் வாழ்வுரிமைகள் தொடர்பில் இலங்கையின் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் உலகின் எந்த ஒரு மேடைக்கும் சென்று உரையாடல்களை மேற்கொள்வதற்கும் தமிழக மற்றும் எந்த ஒரு உலக அரசியல் அமைப்புகளுடனும் இணைந்து நமது மக்களின் நலன் கருதி இலங்கை அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் உள்ள உரிமையை நாம் முழுமையாக வலியுறுத்துகிறோம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காண்பது தொடர்பில் தமது நிலைப்பாடுகளை தமிழ் கட்சிகள் அறிவித்து விட்ட நிலையிலும் இந்நாட்டின் சிங்கள பௌத்த இன- மதவாத கட்சிகளே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்விற்கு தடையாக இருக்கின்றன. இந்த கட்சிகளே தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான இன-மத தாக்குதல்களுக்கு பின்னணியிலும் இருக்கின்றன.

இந்த இன- மதவாத அமைப்புக்களை இலங்கை அரசாங்கமே தட்டிக் கொடுத்து வளர்க்கின்றது. உள்நாட்டில் தீர்வுகள் இல்லை என்ற நிலையிலேயே நாம் வெளிநாடுகளின் கவனத்திற்கு எமது பிரச்சினைகளை கொண்டு செல்கிறோம்.

எனவே, தமிழ் அரசியல் கட்சிகள் வெளிநாடுகளுக்கு சென்று எமது பிரச்சினைகள் தொடர்பில் உரையாடக்கூடாது என்ற இந்த இன-மத வாத அமைப்புகளின் கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-8)



மாத்தறை மாவட்டத்தில் இறந்தோர்களுக்கான உதவி வழங்கும் செயற்றிட்டமொன்று மாத்தறை சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமாதி மன்றத்தின் தலைவர் புத்திக பத்திரண இறந்தவர்களுக்கான உதவி வழங்கும் சங்கத்திற்கு உபகரணங்களை நன்கொடை செய்வதைப் படத்தில் காணலாம்.

# சிறைச்சாலை மரணங்களுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்பு

## கைதியின் மரணத்திற்கு ஜே.வி.பி.கண்டிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் இடம்பெறும் மரணங்களுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கொலை செய்யப்பட்டால் அதன் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த ஜுன் மாதம் 29 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த மரியதாஸ் டில்ருக்ஷன் என்ற கைதி கடந்த 8 ஆம் திகதி உயிரிழந்தார்.

கைதி ஒருவர் மீதான கடுமையான தாக்குதல் மற்றும் படுகொலையை ஜே.வி.பி. வன்மையாகக் கண்டிக்கின்றது. தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்து உயிரிழந்த முதலாம் நபர் இவரல்ல. கடந்த ஜுலை மாதம் 4 ஆம் திகதி வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபன் என்பவரும் இவ்வாறு உயிரிழந்தார்.

பிரேத பரிசோதனை நடத்தப்படுவதற்கு முன்னதாகவே சிறைச்சாலைகள் அமைச்சர் நாடாளுமன்றில் இந்த மரணம் மாரடைப்பினால் ஏற்பட்டது என தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களைத் தவிர வேறு கைதிகளும் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாகவே அறியக்கிடைக்கின்றது. சமாதானம், நல்லிணக்கம் பற்றி அரசாங்கம் சர்வதேசத்திற்கும் நாட்டுக்கும் பிரசாரம் செய்த போதிலும் உண்மையில் சமாதான விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. போர் நிறைவடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது.

தாக்குதல் மற்றும் கொலைகள் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அரசாங்கத்தின் இனவாத கோட்பாடுகளுக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டுமென ஜே.வி.பி. கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-2)

# தேசிய நேர்மைத்திறன் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

இலங்கை அரசாங்கத்தினால் இலஞ்சம், ஊழல் என்பவற்றிக்கு எதிராக செயற்படுவர்களுக்கான தேசிய நேர்மைத்திறன் விருது-2012 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வெளியிடப்பட்டிருக்கும் செய்திக் குறிப்பில் ஊழலுக்கு எதிராகவும் நாட்டில் நேர்மையை நிலைநிறுத்தி நல்லாட்சியை ஏற்படுத்தவும் தொடர்ந்து போராடும் இலங்கைப் பிரஜைகள் மற்றும் நிறுவனங்களுக்காக வழங்கப்படும் விருதே இவ்விருதாகும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் நேர்மைத்திறன் விருதுகள்-2012, ட்ரான்ஸ் பெரண்சி இன்ரர்நஷனல் ஸ்ரீலங்கா 6, 37 ஆவது லேன், குவிஸ் றோட், கொழும்பு 3 என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்கள் பெற விரும்புவோர் 011 562 7432 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பத்திற்கான முடிவுத் திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-3-15)

# முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக அரசாங்கம் விசாரணை நடத்தும்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீறி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபை தேர்தலில் நடந்து கொள்ளவதாக கூறப்படுவது குறித்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கக் கட்சியின் ஒரு அங்கமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விளங்குகிறது.

எனினும் கிழக்கு மாகாண சபை தேர்தல் பிரசாரத்தின் போது அது அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்கும் வகையில் அந்தக் கட்சி நடந்து கொள்வதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எனவே, அது குறித்து விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் பிரச்சினைகளுக்கும் இலங்கை ஜனாதிபதி தீர்வளித்துள்ளாராம்

## பெருமை பாராட்டுகிறார் சுவாமி

இலங்கையின் பிரச்சினைகளுக்கு மட்டுமின்றி இந்தியாவின் பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்வு அளித்துள்ளதாக இந்திய ஜனதாக்கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லா தொழித்ததன் மூலம் இலங்கைப்பிரச்சினைக்கு மட்டுமன்றி இந்திய பிரச்சினைக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த 21 ஆம் நூற்றாண்டு மிகப் பெரிய வெற்றியாக தமிழீழ விடுதலைப்புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிரான வெற்றியை கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்த ஜனாதிபதிக்கு இந்திய அரசாங்கம் அதி உயர் விருதுகளை வழங்கி கௌரவிக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தமிழ் நாட்டில் நடைபெற உள்ள டெசோ மாநாட்டின் போது இலங்கையில் தனிநாடு கோரிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கப்படும் பட்சத்தில் தமிழ்நாடு மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தாம் உள்ளிட்ட குழுவினர் தயாராக உள்ளதாக இந்திய ஜனதாக் கட்சித்தலைவர் கலாநிதி சுப்பிரமணியம்சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கையின் தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கக் கூடாதென எச்சரிக்கை விடுத்துள்ள அவர், அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பின்நிற்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். அவரது எச்சரிக்கையின் பின்னர் பிரிவினை வாதக் கருத்தற்ற மாநாடு ஒன்றினை நடத்துவதாக கருணாநிதி தெரிவித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் சிங்கள, தமிழ் மக்களிடையே நிலவிவரும் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவம் மற்றும் நட்பிற்கு தீங்கு ஏற்படக் கூடியவாறு வெளிச்சக்திகளால் செயற்பட முடியாது எனவும் அதற்கான எதுவித உரிமையும் கிடையாது எனவும் கூறியுள்ளார்.



தமிழ்நாட்டில் ஒருசில குழுக்கள் மேற்கொள்ளும் திட்டங்கள் வெற்றியளிப்பதில்லை எனக் குறிப்பிட்ட அவர், ஒருசில அரசியல்வாதிகளுக்கு விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களிடம் இருந்தும் புலம்பெயர் தமிழர்களிடமிருந்தும் நிதியுதவி கிடைப்பதாகவும் அதன் காரணமாகவே அவர்கள் இலங்கைக்கு எதிரான போக்கினை கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் திரைப்பட கலைஞர்கள் சிலருக்கும் விடுதலைப்புலிகள் ஆதரவாளர்களிடமிருந்து நிதி கிடைப்பதாகவும் எனினும் அவர்கள் தேர்தல்களின் போது படுதோல்வி அடைவதாகவும் தெரிவித்ததுடன் அவ்வாறான சூழ்நிலையிலேயே தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தமிழீழ மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளதாகவும் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார். (ந-2)

# அவுஸ். செல்லவிருந்த பதின்மூன்று பேர் கைது

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்லவிருந்ததாகக் கூறப்படும் 13 பேர் நேற்று முன்தினம் இரவு வென்னப்புவ பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக இவர்கள் வென்னப்புவ தும்மோதரை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து அவ்வீட்டை முற்றுகையிட்ட போது அங்கிருந்த சந்தேக நபர்களையும் அவ்வீட்டு உரிமையாளரையும் கைது செய்துள்ளதாகவும் வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் முல்லைத்தீவு ,வவுனியா, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்ளெனவும் பொலிஸார் கூறினர். (ந-2)

# நாற்று நடுகையில் புதிய முறை

நாற்றுநடுவதற்கானபுதிய முறையொன்றை விவசாய அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

பெஷீட் முறைமை என பெயரிடப்பட்டுள்ள புதியநாற்று நடும் முறையால் உற்பத்தி செலவை குறைத்துக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த முறைமைக்கு அமைய ஒரு ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொள்வதற்கு எட்டு கிலோ கிராம் விதை நெல் போதுமானது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் தற்போது நடைமுறையில் உள்ள முறைமைக்கு அமைய ஒரு ஏக்கரில் நெற் செய்கையை மேற்கொள்வதற்கு 20 கிலோ கிராம் விதை நெல் தேவைப்படுகின்றது.

இதற்கமைய தற்போது ஒரு கிலோகிராம் நெல்லை உற்பத்தி செய்வதற்கு செலவிடப்படுகின்ற 23 ரூபாவை 15 ரூபா வரை குறைத்துக்கொள்ள முடியும் என விவசாய் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# சீபா உடன்படிக்கை செய்யப்பட்டால் இலங்கை மருத்துவத்துறைக்கு பாதிப்பு

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

இந்தியாவுடனான ஒருங்கிணைந்த பொருளாதார கூட்டு (சீபா) உடன்படிக்கை மற்றும் வர்த்தக சேவைகள் தொடர்பான சார்க் உடன்படிக்கை ஆகியவற்றை அமுல்படுத்துவதன் காரணமாக பெரும் எண்ணிக்கையான இந்திய மருத்துவர்கள் இலங்கைக்கு வருவது அதிகரிக்கும் எனவும் இதனால் மருத்துவத்துறைக்கும் பொருளாதாரத்திற்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று முன் தினம் தெரிவித்தது.

இலங்கையில் இந்திய மருத்துவர்களின் பிரசன்னம் அதிகரித்துவருகிறது எனவும் அவர்களின் நம்பகத்தன்மை கேள்விக்கிடமானது எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் டாக்டர் நளின் ஆரியரட்ன கூறியுள்ளார்.

மேற்படி உடன்படிக்கைகள் அமுல்படுத்தப்பட்டால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இதனால் இலங்கை மருத்துவர்களிடையே வேலைவாய்ப்பின்மை நெருக்கடி அதிகரிக்கும். அத்துடன் நோயாளர்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் தொண்டு நடவடிக்கைகள் தவிர்ந்த வெளிநாட்டு மருத்துவர்கள் இந்தியாவில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை இந்தியா இறுக்கமாக பின்பற்றுகிறது.

இந்நிலையில் இலங்கை எதிர்மாறான கொள்ளையை பின்பற்றுவது முறையல்ல. இலங்கை மருத்துவத்துறை தன்னிறைவானதாகும். எமக்கு மேலும் மருத்துவர்கள் தேவயில்லை என அவர் தெரிவித்தார். (ந-2)

# மூதாட்டி நாடு கடத்தப்பட்டார்

இலங்கை உறவினர்கள் எவரும் இல்லாத நிலையில் 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் கனடாவின் ரொரண்டோவில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

இலங்கை தமிழரான ஒருவரே இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இன்னும் சிலருடன் நாடு கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் நாடு கடத்தப்பட்ட விமானத்தில் கனேடிய எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தாதியர் உதவிக்காக சென்றுள்ளதாக கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமக்கு வழங்கப்பட்ட தவறான ஆலோசனையின் கீழ் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்ததால் இவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-2)

# உலகளவில் உணவுப்பொருட்களின் விலை உயர்வடைந்துள்ளது- ஐ.நா

உலகளவில் உணவுத் தானியங்கள் மற்றும் சர்க்கரையின் விலை ஜூலை மாதம் கடுமையாக உயர்ந்துள்ளதாக ஐ.நா.வின் அமைப்பு ஒன்று கூறியுள்ளது.


கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் கோதுமை, சோளம், கம்பு போன்ற பல தானியங்களின் விலை 17 சதவீதம் உயர்ந்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பான உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்ட வரட்சி மற்றும் ரஷ்யாவில் ஏற்பட்ட உற்பத்தி பிரச்சினைகளாலேயே இந்தக் கடுமையான விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இதேவேளை, உலகின் மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தி நாடான பிரேசிலில் மழை கரும்பு விவசாயத்தை பாதித்த காரணத்தால் சர்க்கரையின் விலையும் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

எனினும் அரிசியின் விலையில் எந்த மாற்றமும் இல்லை. குறிப்பிட்ட இந்த தானியங்கள் மற்றும் சர்க்கரை மட்டுமல்லாமல் உலகளவில் அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் சராசரியாக ஆறு சதவீதம் உயர்ந்தது.

ஆனாலும் கடந்த ஆண்டு பெப்ரவரி மாத உணவுப் பொருட்களின் விலையேற்றத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கடந்த ஜூலை மாதத்தில் அது குறைவாகவே இருந்தது. (ந-2)



நியூ றோபாவில்டிங் போம் நிறுவனத்தினரால் மும்மொழிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் எஸ்.டி.எஸ்.இராமச்சந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் பயிற்சி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண் டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியவாதியான வயது முதிர்ந்த ஈழத்தமிழர் ஒருவரின் ஈழப்போர் பற்றிய நினைவுகள்

வயது முதிர்ந்த நிலையில், நீண்ட தாடியுடன் காணப்படும் திரு.டேவிட், இலங்கையில் இடம் பெற்ற இனக்கலவரம் காரணமாக 1984 இல் சென்னையை வந்தடைந் திருந்தார். இலங்கைத் தமிழரான டேவிட் ஐயாவின் தற்போதைய வய்து 88 ஆகும்.



சொலமன் அருளானந்தம் டேவிட்

கட்டடக் கலைஞரான சொலமன் அருளானந்தம் டேவிட் எனும் முழுப்பெயரைக் கொண்ட இவ்ர் ஐக்கியராச்சியத்தின் லிவர்பூல் எனும் இடத்தில் நகரத்திட்ட மிடலாளராக பணியாற்றி, பின்னர் கென்யாவின் மொம்பாசா நகரின் திட்டமிடலாளராகவும் பிரதான கட்டட வடிவமைப்பாளராகவும் பணிபுரிந்தார். தனது தாய்நாடு தொடர்பாக மிகவும் கசப்பான நினைவுகளை மட்டுமே இவர் கொண்டுள்ளபோதிலும், அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறையின் ஊடாக தனது மக்கள் அவர்களது அரசியல் இலக்குகளை என்றாவது ஒரு நாள் அடைந்து கொள்வார்கள் என்பதில் டேவிட் ஐயா அசையாத நம்பிக்கை கொண்டுள்ளார்.

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் இடம்பெற்ற கலவரம் காரணமாக பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களான மலையகத் தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வை வழங்குவதை நோக்காகக் கொண்டு டேவிட் ஐயா *காந்தியம்* எனும் நிறுவனம் ஒன்றை நிறுவி இருந் தார். இவர் 1983 இல் வெலிக் கடைச் சிறைச்சாலையில் இடம் பெற்ற கலவரத்திற்கான சாட்சி யமாக உள்ளார். இக்கலவரத்தில் (ரெலோ) ஆயுதப் போராட்ட அமைப்பைச் சேர்ந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோர் உள்ளடங்கலாக 53 தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். டேவிட் ஐயாவின் நண்பரும் காந்திய அமைப் பின் இணை நிறுவுநருமான கலாநிதி இராஜசுந்தரமும் இக்கலவரத்தின் போது கொல்லப்பட்டார்.

"காந்திய அமைப்பானது அயுதக் குழுவினருக்கு பயிற்சிகளை வழங்கு வதாக முடிவெடுத்த இலங்கை அரசாங்கம், 1983 இல் என்னையும் இராஜசுந்தரத் தையும் கைது செய்தது. வன் முறைச் சம் பவம் நடந்தே றிய பின்னர் கொல்லப்பட்ட மற்றும் அரை உயிரில் தவித்துக் கொண்டிருந்த மனித உடலங் களை நான் பார்த்தேன்" என டேவிட் ஐயா நினைவு கூருகி ன்றார்.

இதன் பின் னர் வெலிக் கடைச் சிறை யிலிருந்த இவர் மட்டக்களப்பு சிறைச்சாலை க்கு இடம்மாற றப்பட்டார். ஆனால், டேவிட் ஐயாவும் இவரு டன் சிறையி லிருந்த 42 பே ரும் சிறையை உடைத்து தப்பிச் சென்றனர். இவ்வாறு தப்பிச் சென்ற இவர்கள் 27 நாட்கள் வரை வன்னிக்காடுகளில் மறைந்திருந்து விட்டு இந்தியாவுக்கு தப்பிச் சென்றனர்.

"நாங்கள் மேலும் மூன்று ஆண்டு கள், எமது காந்திய அமைப்பை தொடர்ந்தும் இலங்கையில் நடாத்தி யிருந்தால், காந்தியின் கனவான 'ராம்ராஜ்ய' என்பதை நிறுவியிருப் போம். ஆனால், சிங்கள பேரின வாதிகள் தமிழ் மக்களை அழிப்பதை நோக்காகக் கொண்டிருந்தனர். இதன் விளைவாக காந்தியம் அழிக்கப்பட் டது" என டேவிட் ஐயா கூறுகிறார்.

கென்யாவின் மொம்பாசாவில் பணிபுரிந்த போது மகாத்மா காந்தி தொடர்பாக டேவிட் ஐயா அறிந்தார். "இந்தியா தொடர்பாக இந்திய சட்ட வாளர் ஒருவரின் எழுதுவினைஞர், 9000 புத்தகங்களை சேகரித்து அவற்றை மொம்பாசா நூல் நிலையத் திற்கு அன்பளிப்பாக வழங்கி யிருந்தார். நான் கென்யாவில் வாழ்ந்த ஒவ்வொருநாள் பின்னேரங் களிலும் பி.ப.4-8 மணிவரை இந்நூலகத்தில் பொழுதைக் கழிப் பேன். அச்சந்தர்ப்பத்திலேயே நான் இந்தியா தொடர்பாகவும், எனது வாழ்வில் முன்னணி பங்கு வகிக்கக் காரணமான மகாத்மா காந்தி தொடர்பாகவும் வாசித்தறிந்து கொண்டேன்" என புலமைப்பரி சிலை வென்று, பின்னர் மெல்பேர்ன் பல்கலைக்கழகத்தில் கட்டட வடிவ மைப்பிற்கான **இளமாணிப் பட்டத் தைப் பெற்றுக்கொண்ட டேவிட் ஐயா** குறிப்பிடுகிறார்.

நகரத்திட்டமிடல் தொடர்பாக கற்பதற்காக பிரித்தானியாவிற்குச் செல்வதற்கு முன்னர் டேவிட் ஐயா இலங்கையின் பொதுநிர்வாகத் **திணைக்களம் ஒன்றில் பணிபுரிந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவை யாற்றுவதை இவர் தனது நோக் காகக் கொண்டுள்ளார்.**

பூகோள- அரசியல் மாற்றத்தை கருத்தில் எடுத்து செயற்படுவதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலை வர் தவறிவிட்டதாகவும் தமிழீழம் என்கின்ற இலக்கை அடைந்து கொள்வதற்கான தனது முயற்சியில் த.வி.பு. தலைவர் நீண்ட தூரம் சென்றிருந்ததாகவும் டேவிட் ஐயா சுட்டிக்காட்டுகிறார்.

"தமிழ் மக்களை பிரபாகரன் பாதுகாப்பதற்காக செயற்பட்டவர் என்பதில் நான் எவ்வித சந்தேகமும் கொண்டிருக்கவில்லை" என டேவிட் ஐயா குறிப்பிடுகிறார்.

இந்தியா-இலங்கை ஒப்பந்தம் எட்டப்பட்டு 25 ஆண்டுகள் நிறை வுற்றுள்ள நிலையிலும் இது தொடர் பில் கசப்பான உணர்வுகளைக் கொண்டுள்ள டேவிட் ஐயா, காந்தி யத்தை பின்பற்றி ஜனநாயக நீரோட் டத்துடன் கலந்து உலகெங்கும் பரந்துள்ள எகா கான் சமூகத்த வர்களைப் போன்று மக்களின் ஒரு சாரார் மறுசாராருக்கு உதவி செய்யும் போதே தமிழ் மக்கள் தமக்கான அரசியல் இலக்கை அடைந்து கொள்ள முடியும் என்கிறார்.

"எகாகான் சமூகத்து மக்கள் **வாரத்தில் ஒருதடவை ஒன்றுகூடி தமது மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்றனர். அத்துடன் சிறார்களின் கல்விக்கான உதவி யையும் வழங்குகின்றனர். இச் சமூகத்தவர்களை இலங்கை தமிழர் களும் பின்பற்ற முடியும்.** கெட்ட வாய்ப்பாக எமது மக்கள் சுயநல வாதிகளாக, உலோபிகளாக வாழ் கின்றனர். தமிழ் மக்களின் ஒரு தொகுதியினரால், நிறுவப்பட்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது தமிழ் சமூகத்தின் நலனைக் கருத்திற் கொண்டு வினைத்திறனாக செயற் பட முடியும்" என்று டேவிட் ஐயா கூறுகிறார்.

"அதேநேரத்தில் யுத்தக் குற்றங் கள் மற்றும் அனைத்துலக சட்டம் தொடர்பான அமெரிக்க வல்லுந ரான பேராசிரியர் பிரான்சிஸ் ஏ.பொய்லேயின் ஆவணங்கள் தொடர்பாகவும் இலங்கை ஜனாதி பதி மகிந்த ராஜபக்ச பொறுப்புக் கூறும் வகையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது, ஐ. நா. ச. மீது அழுத்தம் கொடுக்கமுடியும்" எனவும் டேவிட் ஐயா தெரிவித் துள்ளார்.

"**பொஸ்னியா விவகாரத்தில் பொய்லேயின் முயற்சிகள் வெற்றி யடைந்துள்ளன.** இதேபோன்று இலங்கை விடயத்திலும் நாம் இதனைப் பின்பற்ற முடியும்" என டேவிட் ஐயா குறிப்பிட்டுள்ளார்.

நியூஸ்போர்ட்

## ஜூலை படுகொலையை நேரில்கண்ட சாட்சியாக இன்றும் உள்ள டேவிட்

Black July 1983: the Charge is Genocide


Fifty three Tamil prisoners were murdered whilst in government custody



Dr.S.Rajasunderam Selvarajah Yogachandran (Kuttimuni) Nadarajah Thangathurai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தரியில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 21-II

எங்களூரில் அதிகளவில் பீடை நாசினிகளை வீசிறும் பயிர் வகைகளுள் கத்தரியும் ஒன்று. கத்தரிக்காயில் சேதத்தை ஏற்படுத்தும் தண்டு மற்றும் காய் துளைப்பான் பற்றி கடந்த வாரம் பார்த்தோம். இப்பூச்சி பீடைகளைப் பற்றி விரிவாக அறிந்து கொள்வதன் மூலம் அவற்றினை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் வழிவகைகளை காணக் கூடியதாகவுள்ளது.

கத்தரிப் பயிரில் பூச்சி பீடைகளாக பலவற்றைக் குறிப்பிடும் போதிலும் குறிப்பிட்ட சில பூச்சி பீடைகள் வரிசையில் பச்சையிலை தத்தி (Green Leaf Hoppers) எபிலக்னா வண்டு (EpiLachna beetle) இவற்றுடன் சிவப்பு சிலந்தி சிற்றுண்ணி ( Red spider mite) ஆகியனவும் சேதத்தை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

கத்தரியில் பச்சையிலைத் தத்தியின் சேதம் முழுமையாக வெற்றுக்கண்ணுக்கு தெரிவதில்லை. சாறு உறுஞ்சும் பூச்சிப் பீடையாக இருப்பதனால் இவற்றின் சேதம் முதலில் இலைப்பகுதியில் அதிகரித்து இறுதியில் முழு தாவரமுமே பாதிப்புக்குள்ளாகிவிடும். மேலும் இத்தத்திகள் மூலமே மைக்கோப்பிளாஸ்மா எனும் நுண்ணங்கி காவப்பட்டு கத்தரி தாவரத்தில் தொற்றுக்குள்ளாகும் போது அது கத்தரியில் சிற்றிலை நோயை (Little Leaf) உருவாக்குகின்றது.


கத்தரி சிற்றிலை நோயின் பாதிப்புக்குட்பட்ட தாவரம் காய்களெதனையும் உருவாக்குவதில்லை. மாறாக எதுவித பிரயோசனமுமற்று நோய்க்காரணியை மேலும் பரப்பும் இடமாகவே இருக்கும். அதனால் இந்நோயினால் பீடிக்கப்பட்ட கத்தரி தாவரத்தை பிடுங்கி அழித்து விடுவதே சிறந்தது. இது மேலும் இந்நோய் காரணி இலைத் தத்திகளினால் காவப்படுவதிலிருந்து பாதுகாக்கும்.

கத்தரியில் வெட்டியுண்ணும் அல்லது சுரண்டியுண்ணும் பூச்சி பீடைகளில் எபிலக்னா வண்டினது தாக்கம் பெரிதாக உணரப்பட்டிருக்கின்றது. இவ்வாண்டினது குடம்பி மற்றும் நிறைவுடலி பருவங்கள் இலையை அரித்து உண்ணுவதனால் கத்தரி பயிரின் ஒளித்தொகுப்பு பகுதி குறைவடைந்து அதனால் பயிரின் வீரியம் பாதிக்கப்பட்டுவிடும். இந்த சேதத்தினால் உற்பத்தியாகும் கத்தரிக் காயினளவு வெகுவாக குறைந்து விடவும் காயினளவு சிறுத்து விடவும் வாய்ப்புக்களுண்டு.

பீடைநாசினி பயன்படுத்தும் போது சாறு உறுஞ்சும் பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த ஊடு புகுந்து தாக்கும் பூச்சி பீடை நாசினிகளையும் வெட்டியுண்ணும் வாயுறுப்புடைய பூச்சி பீடைகளை கட்டுப்படுத்த தொடுகை மூலமான பூச்சி பீடைநாசினிகளையும் தெரிவு செய்தல் வேண்டும். தேவைக்கதிகமாகவோ அல்லது தெரிவு தவறாகவோ பீடை நாசினிகளை விசிறுவதனால் எது வித பயனும் இல்லை. அதேவேளையில் தேவையற்ற பீடைநாசினி பிரயோகம் சூழலை மாசு படுத்துவதுடன் உணவுப்பொருட்களை நஞ்சாக்கவும் செய்துவிடும்.

கத்தரி பயிருக்கான நோய்களாக நாற்றழுகல், வேர் அழுகல், அடியழுகல், வாடல், இலைப்புள்ளி எனபலவற்றை குறிப்பிடலாம். நாற்று மேடை தயாரிக்கும் போது நாற்றழுகல் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகம். இதனை இயன்றளவு தவிர்ப்பது நாற்று மேடையை சரிவர அமைப்பதன் மூலம் சாத்தியமாகும்.

நாற்றழுகலை பிதியம் (Pythium spp.) எனும் ஒருவகை பூஞ்சணம் ஏற்படுத்துகின்றது. மண்வாழ் பூஞ்சணமான பிதியம் அபானிடமேற்றம் (Pythium aphanidematum) சொலனேசியே குடும்ப பயிர்களில் நாற்றழுகலை ஏற்படுத்தக் கூடியது.



குறிப்பாக கத்தரி, மிளகாய், தக்காளி பயிர்களில் இந்நாற்றழுகல் சிறந்த நாற்றுக்களைப் பெறுவதில் தடையாக இருக்கும். நாற்றழுகலைத் தவிர்ப்பதற்கு நாற்று மேடை தயாரித்தல் மற்றும் பரிகரணம் என்பன சிறந்த முறையில் செய்தல் வேண்டும். நீர் தேங்காத இடத்தில் சுத்தமாக வைக்கோல் மற்றும் இலைகுழைகளை எரித்து பூஞ்சணத்தின் தோற்றுவாய் இல்லாதவகையிலும் விதைகளை இடும் போது கப்ரான் அல்லது திராம் ஆகிய பூஞ்சண நாசினிகளால் விதை பரிகரணஞ் செய்தோ அல்லது ரைக்கோடேர்மா எனும் பூஞ்சணத்தினால் பரிகரணஞ் செய்தோ விதைக்கலாம்.

உயிரியல் காரணியான ரைக்கோ டேர்மாவை பயன்படுத்தும் போது மண்ணுள் நல்ல நுண்ணங்கிகளின் அளவு அதிகரிப்பதற்கும் அதன் மூலம் இயற்கையான நோயெதிர்ப்பு பொறிமுறையை உருவாக்கவும் முடியும். இயற்கை பொறிமுறை மூலமான நோயெதிர்ப்பு பொறிமுறையை விருத்தி செய்வது நல்ல வீரியமான நாற்றுக்களை பெற வழிவகை செய்யும்.

# டெசோ மாநாடு இந்தியாவில் நடக்கிறது; இலங்கையின் விமர்சனம் தேவையற்றது

## இந்திய அமைச்சர் தெரிவிப்பு

தமிழீழ ஆதரவாளர் மாநாடான டெசோ இந்தியாவில் நடைபெறும் ஒரு நிகழ்வாகும். எனவே அதனை இலங்கையில் உள்ளோர் விமர்ச்சிக்க தேவையில்லை என்று மத்திய அமைச்சர் வி.நாராயணசாமி குறிப்பிட்டுள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ள டெசோ மாநாடு குறித்து இலங்கையில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இது குறித்து கருணாநிதியும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

டெசோ மாநாடு குறித்து மத்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று நாராயணசாமியிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர்,

இம்மாநாடு இந்தியாவிற்குள் நடைபெறும் ஓர் உத்தியோகபூர்வ மாநாடாகும். இது தொடர்பில் வேறு ஓர் நாட்டுக்கு எதிர்ப்பை வெளியிடும் உரிமை கிடையாது.

இந்த மாநாட்டில் இலங்கை வாழ் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

இந்த மாநாடு தொடர்பில் இலங்கைத் தலைவர்கள் சிலர் வெளியிடும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை என நாரயணசுவாமி தெரிவித்துள்ளார். இதேவேளை இந்த மாநாட்டில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி பிரதிநிதிகள் பங்கேற்க மாட்டார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# மோசடி செய்தவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் உறவினர் எனக்கூறி காலி பிரதேசத்தில் காணியொன்றுக்கு போலி உறுதியை தயாரித்து அதனை 25 இலட்சம் ரூபாவிற்கு விற்பனை செய்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹபராதுவ- மிஹிரிபென்ன பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் பாலி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ந-2)

# முஸ்லிம்களின் உரிமைகளைப் பற்றி அஸ்வரும் ஹக்கீமும் கவலைப்படுவதில்லை

## பம்மாத்துகிறார்கள் என்கிறார் அப்துல் மஜித்

இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் எந்தப்பள்ளிவாசலுக்கும்ஆபத்தில்லைஎனபாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் கூறும் அதேவேளை இந்த ஆட்சியில் பெண்களுக்கு தமது வீட்டில் கூட தொழமுடியவில்லை என அரசாங்க அமைச்சர் ரவூப் ஹக் கீம் கூறுகிறார்.இதில் எது உண்மை என்பதை ஹக்கீமினால் பாராளுமன்றத்தில் தெளிவு படுத்த முடியுமா என உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத் கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மையில்பாராளுமன்றத்தில்உரையாற்றிய ஏ.எச்.எம். அஸ்வர், இந்த ஆட்சியில் முஸ்லிம்களின் எந்தவொரு பள்ளிவாசலும் தாக்கப்படவில்லை என உரையாற்றினார். இதேவேளை கிழக்கில் தேர்தல் பிரசாரம் செய்யும் மு.கா.தலைவரோ இந்த அர சாங்கத் தில் மத சுதந்திரம் இல்லை என்றும் நோன் புக்காலத்தில் பெண்கள் தமது வீடுகளில் கூட தொழ முடியவில்லை என்றும் கூறுகிறார்.

அஸ்வர் அரசாங்க கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹக்கீம் அந்த அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியின் தலைவர். இப்படி அரசாங்கத்தில் உள்ள இருவரும் முரண்பாட்டுடன் பேசும்போது அஸ்வர் பாராளுமன்றத்தில் பேசியதற்கு அதே பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை பாராளுமன்றத்தில் வைத்து இதற்கு பதில் அளிக்கத்தயங்குவது ஏன்?

கிழக்கிலும் தமிழ்மொழி தவிர வேறு மொழி தெரியாத பொதுமக்கள் மத்தியில் வீராப்புடன் பேசும் ரவூப் ஹக்கீம், தாம் ஒவ்வொரு வாரமும் அமைச்சரவைக்கூட்டத்தின்போதும் ஜனாதிபதியைச் சந்திக்கும் போதும் பாராளுமன்றத்திலும் இவை பற்றிப் பேசாமல் இருக்கின்றார்.

இவர்களை மக்கள் பாராளுமன்றம் அனுப்பியது அங்குள்ள கதிரைகளை சூடாக்கவா அல்லது சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவா என்பதுகூட தெரியாத நிலையில் மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இந்த லட்சணத்தில் இவ்வாறு இரட்டைவேடம் போட்டு தமது சுய நலத்திற்காக மக்களை தொடர்ந்தும் ஏமாற் றும் இவர்களால் முஸ்லிம்களின் உரிமை களை பெற்றுத்தர முடியாது என்பதை கடந்த 10 வருடங்களாக நாம் மட்டுமே சொல்லி வருகின்றோம். எமது கூற்று தொடர்ந்தும் உண்மையாகிக் கொண்டேயிருக்கிறது என்பதை மக்கள் அறிவர் என்று குறிப்பிட்டுள்ளார். (ந-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

187

## கூனை நிமிர்த்த கூறிய அறிவுரை

விஜயநகர சாம்ராஜ்ஜியத்துக்கு வெகு தொலைவில் இருந்த ஒரு கிராமத்தில் ஒரு கபட சந்நியாசி வசித்து வந்தான். நீண்ட காலமாக கிராமமக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்துக் கொண்டிருந்த கபட சந்நியாசியை அவனது ஏமாற்று வேலையை தெரிந்து கொண்ட கிராமமக்கள் கிராமத்தை விட்டு விரட்டிவிட்டார்கள். கிராமத்து மக்களால் விரட்டப்பட்ட கபட சந்நியாசி பல நாட்கள் நடந்து விஜய நகரத்து எல்லையை வந்தடைந்தான். விஜய நகரத்து எல்லையில் ஓடிக் கொண்டிருந்த் ஆற்றின் கரையில் கூனனான ஒரு சலவைத் தொழிலாளி வசித்து வந்தான். பல நாட்கள் வெயிலிலும் குளிரிலும் நடந்து களைத்திருந்த கபட சந்நியாசி சலவைத் தொழிலாளியின் வீட்டு முன்புறம் இருந்த திண்ணையில் அமர்ந்து விட்டான். அமர்ந்தவன் தூங்கியும் விட்டான்.

சிறிது நேரத்திற்கு பின்பு ஒரு பெரிய அழுக்குத்துணிமூட்டையைதூக்கிக்கொண்டு கூனனான சலவைத் தொழிலாளி தன் வீட்டிற்கு வந்தான். வந்தவன் தன் வீட்டுத் திண்ணையில் யாரோ ஒரு புதிய மனிதன் படுத்து உறங்குவதைப் பார்த்து தான் சுமந்து வந்த அழுக்குத் துணி மூட்டையை கீழே இறக்கி வைத்து விட்டு தூங்கிக் கொண்டிருந்த புதிய மனிதன் அருகில் சென்று பார்த்தான். தூங்கிக் கொண்டிருந்தவனின் தாடியையும் மீசையையும் பார்த்து கூனனான சலவைத் தொழிலாளி தன் வீட்டிற்கு வந்திருப்பது ஒரு பெரிய சந்நியாசி என்று தெரிந்து கொண்டு பயபக்தியுடன் கைகட்டி வாய் பொத்தி சந்நியாசியின் அருகில் நின்று கொண்டான். சற்றுக் களைப்பு தீர்ந்து கபட சந்நியாசி கண் விழித்து பார்த்த போது தன் அருகில் மிகவும் பயபக்தியுடன் ஒரு கூனன் நிற்பதைப் பார்த்து அவனை ஏமாற்றி பிழைக்கத் திட்டம் போட்டான்.

கூனனான சலவை தொழிலாளியைப் பார்த்து கபட சந்நியாசி இந்த வீடு உன்னுடையதா என்று கேட்டான். கூனனான சலவைத் தொழிலாளியும் மிகவும் பணிவாக ஆம் என்று பயந்தவாறு பதில் சொன்னான். கூனனான சலவைத் தொழிலாளி மிகவும் பயந்த சுபாவம் உள்ளவன் என்பதைப் புரிந்து கொண்ட கபட சந்நியாசி அவனைப் பார்த்து தான் ஒரு பெரிய மகான் என்றும் தன்னால் குணப்படுத்த முடியாத வியாதிகளே கிடையாது என்றும் கூறினான். கபட சந்நியாசியின்வார்த்தைகளை உண்மை என்று நம்பிய கூனனான சலவைத் தொழிலாளியும் அவனுக்கு உண்ண உணவும் தங்க இடமும் கொடுத்து ஆதரித்தான்.

ஒருசில நாட்களில் கபட சந்நியாசி விஜயநகர அரசரின் இராஜ குருவின் நன்மதிப்பைப் பெற்று விட்டான். இராஜ குருவின் நட்பினால் கபட சந்நியாசியின் பெயர் விஜய நகர மக்கள் மத்தியில் பிரபலமாகப் பேசப்பட்டது. விஜய நகர மக்கள் தங்கள் நோய் குணமாக கபட சந்நியாசியை நாடிச் சென்றார்கள். நோய் குணமாகச் சென்றவர்களுக்கு கபட சந்நியாசி கொடுத்த மருந்து நோயைக் குணப்படுத்தாமல் அவர்களைப் பைத்தியக்காரர்களாக்கி விட்டது. கபட சந்நியாசியின் மருந்தால் சித்தம் கலங்கி உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போனது. கபட சந்நியாசியின் அனைத்து செயல்களுக்கும் பக்கபலமாக இருந்து செயற்பட்டவன் கூனனான சலவைத் தொழிலாளியும் ராஜகுருவும் தான் என்பதைப் புரிந்து கொண்டான் தெனாலிராமன்.

கபட சந்நியாசியின் மருந்தால் கொலை வெறி பிடித்து அலைந்து கொண்டிருந்த ஒரு பைத்தியக்காரனை தந்திரமாக அழைத்துச் சென்று கபட சந்நியாசியிடம் மோத விட்டான் தெனாலிராமன். பைத்தியக்காரனும் தான் என்ன செய்கிறோம் என்று புரியாத நிலையில் கபட சந்நியாசியின் தலையைப் பிடித்து வேகமாகச் சுவர் ஒன்றின் மீது மோதி மண்டையை பிளக்கச் செய்து விட்டான். மண்டை பிளந்த கபட சந்நியாசியும் உடனே இறந்து விட்டான். பைத்தியக்காரனை கபட சந்நியாசியி



டம் மோத விட்ட நிகழ்ச்சியை விஜய நகர ஒற்றர்கள் பார்த்து விட்டார்கள்.

ராஜகுருவின் நண்பனான கபட சந்நியாசி இறந்த செய்தி கேட்ட காவலர்கள் உடனே தெனாலிராமனைக் கைது செய்து கிருஷ்ண தேவராயர் முன்பு நிறுத்தினார்கள்.

நான் ஏதும் தவறு செய்யவில்லை என்றும் பொதுமக்கள் நிறையப் பேர் மரணத்துக்கு காரணமான ஒரு கபட சந்நியாசியைத் தான் அவனால் பாதிக்கப்பட்ட ஒரு பைத்தியக்காரனை விட்டு கொன்றதாக கூறினான் தெனாலிராமன். கிருஷ்ணதேவராயர் அருகில் இருந்த ராஜகுரு உடனே அரசரைப் பார்த்து அரசே! கொலை செய்யத் தூண்டுவதும் கொலைக்கு நிகரான குற்றமாகும். ஆகவே தெனாலிராமனை கழுத்தளவு மண்ணில் புதைத்து யானைக் காலால் அவன் தலையை மிதிபடச் செய்ய வேண்டும் என்றார். கிருஷ்ண தேவராயரும் ராஜகுருவின் வார்த்தைக்கு மறுப்புக் கூறாமல் அவர் சொன்ன தண்டனையை நிறைவேற்றும் படி காவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தெனாலிராமனைப் பிடித்துச் சென்ற காவலாளிகள் இருவரும் ஊருக்கு வெளியே இருந்த ஒரு மைதானத்தின் மத்தியில் இருந்த மண் தரையில் பள்ளம் தோண்டி அதில் தெனாலிராமன் கழுத்து மட்டும் தெரியும் படி நிற்க வைத்து உடம்பைச் சுற்றிலும் மண் போட்டு நிரப்பி விட்டார்கள். தெனாலிராமன் கழுத்து மட்டும் வெளியே தெரியும் படி செய்த காவலர்கள் யானையை அழைத்துவர புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

யானையை அழைத்து வரச் சென்ற காவலர்கள் நீண்ட நேரமாக வரவில்லை. அதற்குள் மேற்கே சூரியன் மறைந்து இருட்ட ஆரம்பித்து விட்டது. கபட சந்நியாசிக்கு உதவிய கூனன் இருட்டில் துணி மூட்டையை சுமந்து கொண்டு தெனாலிராமன் புதைபட்டுக் கிடக்கும் மைதானத்தின் வழியே வரும்போது தெனாலிராமன் தலையில் கூனனின் கால் பட்டு அவன் இடறி துணி மூட்டையைக் கீழே போட்டுவிட்டு கீழே உட்கார்ந்து விட்டான்.

உட்கார்ந்தவன்எழுந்த போது அவன் முதுகில் கூன் விழுந்திருப்பதைப் பார்த்த தெனாலி ராமன் சற்றும் தாமதிக்காமல் கூனனைப் பார்த்து ஐயா! உங்கள் முதுகில் உள்ள கூன் எவ்வளவு காலமாக உள்ளது என்று கேட்டான். கூனனும் ஐயா! நான் பிறப்பிலேயே கூனன் என்று கூறினான். தெனாலி ராமனும் அவனைப் பார்த்து நானும் உன்னைப் போலவே பிறவிக் கூனன். என் கூன் நிமிர ஒரு சித்த வைத்தியர் என்னை இன்று விடியற்காலை இந்த பள்ளத்தில் நிற்க வைத்து விட்டுச் சென்று விட்டார். செல்லும் போது இன்று மாலைக்குள் என் கூன் முதுகு

## தெனாலிராமன் கதைகள்

சரியாகிவிடும் என்று கூறிச் சென்றார். மாலை முடிந்து இருட்டத் தொடங்கி விட்டது. என் கூன் சரியாகி விட்டதா என்று பார்க்க மிகவும் ஆசையாக உள்ளது. ஆகவே நீ என்னை சுற்றி உள்ள மண்ணை அகற்றி என்னை வெளியே எடுத்து விட்டால் மிகவும் நன்றாக இருக்கும். நானும் உனக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன் என்று மிகவும் அன்பான வார்த்தைகளால் கூறினான்.

தெனாலிராமன் கூறியதை உண்மை என்று நம்பிய கூனன் மண்ணில் புதைந்துள்ளவன் உண்மையிலேயே கூனன் என்று எண்ணி மண்ணை அகற்றி தெனாலிராமனை வெளியே தூக்கி விட்டான். வெளியே வந்த தெனாலிராமன் உடனே பிறவியில் உண்டான கூன் சரியாகி விட்டது என்று கூறி ஆடிப் பாடி குதிக்க ஆரம்பித்தான்.

தெனாலிராமன் மகிழ்ச்சியில் குதிப்பதைப் பார்த்த கூனன் அவனை பார்த்து, ஐயா! உங்களுக்கு பிறவியிலேயே உண்டான கூன் இந்தப் பள்ளத்தில் நின்றதால் சரியாகி விட்டதுபோல் என்னையும் தயவுசெய்து இந்தப் பள்ளத்தில் இறக்கி சுற்றிலும் மண்ணை போட்டு மூடி என் கூன் நிமிர வழி செய்யுங்கள் என்றான்.

உடனே தெனாலிராமனும் கூனனைப் பள்ளத்தில் இறக்கி அவன் தலை மட்டும் வெளியே தெரியுமாறு உடலைச் சுற்றி மண்ணை தள்ளி மூடி விட்டு சென்று விட்டான்.

யானையை அழைத்துவர சென்ற காவலர்கள் இருட்டி விட்டதால் புதைந்திருப்பது தெனாலிராமன் தான் என்று எண்ணி கூனன் தலையை யானையின் காலால் மிதிக்கச் சொல்லி அவனைக் கொன்று விட்டார்கள்.

தப்பி வந்த தெனாலிராமனும் கிருஷ்ண தேவராயருக்கு மிகவும் நெருக்கமான அரசாங்க அதிகாரியை சந்தித்து ராஜகுருவின் தவறான தீர்ப்பால் அப்பாவியான தெனாலி ராமன் உயிர் இழக்க நேர்ந்ததை கிருஷ்ணதேவராயரிடம் சொல்லச் சொன்னான்.

தொடர்ந்து அவன் கபட சந்நியாசி செய்த அக்கிரமங்களை மன்னரிடம் கூறச் சொல்லி அவனால் உயிர் இழந்தவர்கள் ஏராளம் என்றும் சித்த பிரமை பிடித்து அலைபவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்காது என்றும் கூறச் சொன்னான்.

இத்தனை அக்கிரமக்காரியங்களுக்கு ராஜகுருவும் கூனனான சலவைத் தொழிலாளியும்தான் காரணம் என்றும் கூறச் சொன்னான்.

அரசாங்க அதிகாரி கூறிய உண்மையை கேட்ட கிருஷ்ணதேவராயர் நியாயமற்ற முறையில் தெனாலிராமனை யானை காலால் மிதித்து கொன்று விட்டோமே என்று வருந்தினார்.

அந்த சமயத்தில் அங்கு வந்த தெனாலிராமன் கிருஷ்ணதேவராயரை வணங்கி தான் மரணத்தின் பிடியில் இருந்து மீண்டு வந்ததற்குக் காரணம் கூனனான சலவைத் தொழிலாளி என்று கூறினான். தன் உயிரைக் காப்பாற்றிய சலவைத் தொழிலாளிக்கு நன்றிக்கடனாக ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்றும் கூறினான்.

தெனாலிராமன் கூறியதைக் கேட்ட கிருஷ்ணதேவராயரும் தெனாலிராமனைப் பார்த்து எந்தவிதமாக உதவி செய்ய வேண்டும் என்று கேட்டார். தெனாலி ராமனும் மன்னரிடம் அரசே! கூனனின் மனைவிக்கு அவள் வாழ்நாள் முழுவதும் மாதாமாதம் அவள் செலவுக்கு அரசாங்க கஜானாவில் இருந்து பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கிருஷ்ணதேவராயரும் தெனாலிராமனின் இரக்க குணத்தை முழுமையாக உணர்ந்து கூனனின் மனைவிக்கு உதவி செய்வதாக வாக்களித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சைவக் கலாசாரத்தின் கேந்திரஸ்தானம் ஆகுமா?

நல்லூரிலிருந்து தமிழர் மன்னர்களை அந்நியர்கள் அகற்றி விட்டாலும் அங்கிருந்து தமிழ்க் கடவுளான முருகனை அவர்களால் அகற்றி விட முடியவில்லை.

சில நூற்றாண்டுகளாக முருகனின் இராச தானியாக மட்டும் இருந்து வரும் இந்நகர் அவனருளால் இலங்கையைப் பொறுத்தவரை யில் சைவக் காலாசாரத்தின் கேந்திர ஸ்தானமா கவும் விரைவில் மாறலாமென்பதற்குப் பல அறிகுறிகள் இப்பொழுது காணப்படுகின்றன.


தென் இந்தியாவிலுள்ள காஞ்சிபுரம், கும்ப கோணம் போல நல்லூரும் எங்கு பார்த்தாலும் கோவில்கள் தென்படும் ஒரு சைவத் திருநகராக விளங்குகிறது. இக்கோவில்களுக்கெல்லாம் நடுநாயகமாக விளங்குவது கந்தசுவாமி கோவில்.

கந்தசுவாமி கோவிலை நிர்வகிக்கும் பொறு ப்பைச் சமீபகாலத்தில் ஏற்றுக் கொண்ட தர்ம கர்த்தாக்களின் அயராத உழைப்பால் இக்கோ வில் இலங்கையிலுள்ள மற்றச் சைவாலயங் களுக்கெல்லாம் ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்கி வருகின்றதென்பது நாடறிந்த உண்மை.

போதைய நிர்வாகத்தரின் பரிபாலனத்தில் கோவிலின் அமைப்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரு வதை அறியாதார் யார்? அவரது திருப்பணி களை மனதார மெச்சி அவரது கருத்திலுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் யாவும் நிறைவேறும் பொருட்டு அவரது பரிபாலனம் பல்லாண்டு பல்லாண்டு நீடிக்க வேண்டுமென நல்லூரான் திருவருளை வேண்டாதார் யார்?

***ஞானசம்பந்தர் ஆதீனம்*** அவற்றுள் ஒன்று. தென் இந்தியாவில் தமிழ்ப் பேரரசுகள் மறை ந்தபின் சைவத்தையும் தமிழையும் பேணி வளர்த்தவை சைவ ஆதீனங்களே. இத்தகைய ஆதீனங்கள் இது காறும் இலங்கையில் தோன் றாமலிருந்த குறையைத் திருப்பெருந் திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் தீர்த்து விட் டார்கள். ஆதீன சம்பிரதாயத்திற்குரிய பூசைக் கிரமங்கள், நாயன்மாரின் குருபூசைகள், மகேஸ் வர பூசை, சைவசித்தாந்த வகுப்பு, பஜனை, சைவப்பிரசார வெளியீடு, யோகாசனப் பயிற்சி போன்ற பல அரிய பணிகளை இவ்வாதீனம் செய்து வருகிறது. கந்தசுவாமி கோவில் வரு டாந்தத் திருவிழாக்களின் போதும் கந்தஷஷ்டி , காத்திகைத் தினங்களின் போதும் ஆதீன கர்த்தர் செய்துவரும் அதியற்புத, அதிமதுர கதாப்பிரசங்கங்கள் பக்த கோடிகளுக்குப் பெரு விருந்தாக அமைகின்றன.

ஆதீனம் இவ்வாறு செய்து வரும் அரிய பணிகளை விரிவுபடுத்தவும் இன்னும் பல புதிய பணிகளைத் தொடங்கவும் தம்பிரானவர்கள் பல திட்டங்களை வகுத்துள்ளார். அபிமானிகளுடைய ஆதரவுதான் வேண்டும்.



நல்லூர் வீதியிலுள்ள இன்னொரு ஸ்தாபனம் நாவலர் மணிமண்டபமாகும். நாவலர் பெரு மானின் நினைவுச் சின்னமாக அமைந்துள்ள இம் மண்டபத்தில் புராணப் படிப்பு, தேவாரப் பண்ணிசை வகுப்பு, பஜனை முதலியவை கால த்துக்குக் காலம் நடந்து வருகின்றன. நாவலர் நோக்கங்களுக்கிசைய சைவ சமய அறிவைப் பரப்புவதற்கும் சைவ சமய சாஸ்திர ஆராய்ச் சிக்கு வாய்ப்பு அளிப்பதற்கும் ஒரு சிறந்த நூல கத்தை இம் மண்டபத்தில் நிறுவுவது நாவலர் சபையின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

> கந்தசுவாமி கோவிலைச் சுற்றி அண்மைக் காலத்தில் சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பல நிறுவனங்கள் தோன்றியிருப்பதைப் பலர் அறிவர்.

இந்நாட்டில் பல நூலகங்களிருந்தாலும் சைவ சமய நூற்பரப்பு முழுவதையும் தன்னகத்தே கொண்ட ஓர் ஸ்தாபனம் இதுவரையிலும் நிறுவப் படவில்லை. அத்தகைய ஒரு ஸ்தாபனமாக இது அமைய வேண்டுமென்பதே நாவலர் சபையின் நோக்கம். நாவலரும் அவர் பரம்பரையில் வந்த பெரியார்களும் வெளியிட்ட நூல்கள் யாவும் சாத்தியமான வரையில் முதற் பதிப்புப் பிரதிகள் இங்கு இடம்பெறும் என்று நாம் கூறத் தேவை யில்லை. இம் முயற்சி வெற்றியடையச் சைவ அபிமானிகள் முன்வந்துதவ வேண்டும்.

நாவலர் சபையின் இன்னொரு நோக்கம் கோவில் குருக்களாக வரவிரும்பும் பிராமணச் சிறார்களுக்குப் பயிற்சியளிக்கும் ஒரு வேதாகமப் பாடசாலையை நிறுவுவதாகும். நாவலர் பெரு மான் தாம் வகுத்த சமயப் பாதுகாப்புத் திட்டத்தில் இதற்கு முக்கிய இடம் கொடுத்திருந்தார்.'

ஒரு பெரிய ஸ்தாபனத்தால் பொறுப்பேற்று நடத்த வேண்டிய மேற்படி முயற்சிக்கு ஒரு முன் னோடியாக நிலைய சிரோன்மணி பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் தமது சொந்தப் பொறு ப்பில் சில காலமாக வேதாகம வகுப்புக்களைப் பல இடர்பாடுகளுக்கிடையில் நடத்தி வருகிறார்.

நல்லூர் வீதியில் உள்ள 63 நாயன்மார் மடத் தில் பயிலும் அவரது மாணவர்கள் எழுப்பும் வேத கோசத்தை கேட்கும் பொழுதெல்லாம் நமது மூதாதையர் போற்றிய குருகுல வாழ்க்கையும் இனிவரப் போகும் புதிய நல்லூரும் நமது மனத் திரையில் மாறி மாறித் தோன்றும்.

அந்நாளில் செல்லப்பா சுவாமிகள் அருந் தவம் புரிந்து அதிசயம் விளைத்த தேரடியில் வருடந்தோறும் சில மாதங்களுக்குப் புராண பட்னம் ஒழுங்காக நடைபெறுவது வழக்கம். இதில் ஆண்களும் பெண்களுமாகப் பக்தர்கள் பங்கு பற்றிப் பெரும்பயன் அடைகிறார்கள்.

கோவிலுக்குச் சற்றுத் தூரத்தில் அமைந் துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபம் சைவர்க ளுக்கிடையில் ஒரு சமய விழிப்பை உண்டாக்கி வருகிறது. வற்றாத ஞான ஊற்றுப் பாய்ந்து கொண் டிருக்கும் நமது தாய் நாட்டுடன் தொடர்பு வைத்தி ருக்கும் இத் ஸ்தாபனம் காலத்துக்குக் காலம் அங்கிருந்து பல பெரியார்களையும் ஞானிக ளையும் அழைத்து அவர்களது தரிசனத்தை நாம் பெறவும் அவர்களது அமுத மொழிகளை நாம் கேட்கவும் வாய்ப்பு அளித்து வருகிறது.

வீதியிலுள்ள மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஒரு மகோன்னதமான காலத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. அது வருங் காலத்தில் எத்த கைய உருவத்தைப் பெறுமென்பது சைவப் பெரி யார்களின் முயற்சியையே பொறுத்திருக்கிறது.

நல்லூர்ப்பதி நமது கலாசாரத்தின் கேந்திர ஸ்தானமாக மாறிக் கொண்டு வருகின்றதென் பதற்கு ஒரு நல்ல அறிகுறி. தமிழிசையை வளர்ப்பதற்கு இங்கு பல நிறுவனங்கள் செய்து வரும் அபாரத் தொண்டாகும். வருடம் முழு வதும் இசை வெள்ளம் கரை புரண்டோடுவதை இங்கு காணலாம்.

பக்திப் பாடல் இசையரங்கு வெள்ளிக்கிழ மைப் பஜனைக் கோஷ்டியுடன் பல நிறுவன ங்கள் இசைக் கலையை வளர்ப்பதில் காட்டி வரும் ஆர்வம் ஒரு முதல் தரமான தமிழ் இசைக் கல்லூரி இங்கு தோன்றலாம் என்ற நம்பிக் கையை நமக்குக் கொடுக்கிறது.

**ஏ. திருநீலகண்டன் (B.S.C.(ECOM)**

கந்தசுவாமி கோவில் இலங்கைச் சைவ மக்கள் வாழ்வில் பெற்றுள்ள இடமும் அதனைச் சுற்றிப்பல நிறுவனங்கள் இயங்கத் தொடங்கி யிருப்பதும் ஒரு புதிய தேவையை உண்டாக்கியி ருக்கின்றன. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இங்குவந்து திரளும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வசதியாகத் தங்குவதற்குத் தற்போ துள்ள மடங்கள் சற்றும் போதா. இன்னும் பல மடங்கள் தோன்றுவது அவசியம். கதிர்காமத் திலுள்ள இராமகிருஷ்ண மடத்தைப் போன்ற ஒரு பெரிய மடத்திற்கு உடனடியான தேவையி ருக்கிறது. சைவ அபிமானமும் செல்வாக்கும் வசதியுமுள்ள பெரியார்கள் முயற்சி செய்வார்க ளானால் நல்லூரான் கிருபை நிச்சயம் கிடைக் கும்.

# கொலைச்சந்தேகநபர் மீண்டும் இலங்கை ஆளும் கட்சியில்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த ஆண்டு கிறிஸ் துமஸ் தினத்தன்று பிரிட்டிஷ் பிரஜை ஒரு வரை கொலை செய்தார் என்கிற சந்தேகத் தில் ஆளும் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அக்கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்துக்குரிய நபரான சம்பத் விதா னபதிரன ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யிலிருந்து 12 நாட்களுக்கு முன்னர்தான் நீக்கப்பட்டிருந்தார். உள்ளூர் கவுன்சில் தலை வரான அவர் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது குறித்து கேள்விகள் எழுந்துள்ளன.

கடந்த வருடம் இலங்கைக்கு சுற்றுலா நிமித்தம் பயணம் மேற்கொண்டிருந்த பிரிட் டிஷ் பிர்ஜை குர்ரம் ஷேக் ஒரு விடுதியில் கொலை செய்யப்பட்டார்.

பிரிட்டனின் ராத்ஷ்டேல் பகுதியைச் சேர் ந்த அவர் மத்திய கிழக்கின் காசாப் பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தில் பணியா ற்றி வந்தார். பணியிலிருந்து சிறு விடுப்பு ஒன்றில் ஓய்வுக்காகவும் சுற்றிப் பார்க்கவும் அவர் இலங்கை சென்றார்.

ஆனால் கடந்த ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று அவர் தங்கியிருந்த விடுதிக்குள் நுழைந்த ஒரு கூட்டம் அவரை கடுமையாக தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

நாற்காலிகள், உடைந்த போத்தல்கள் ஆகியவற்றால் தாக்கப்பட்ட பின்பு அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

அவரது தோழியான ரஷ்ய நாட்டைச் சேர்ந்த விக்டோரியா அலெக்ஸாண்ட்ரோவா கடுமையான தாக்குதலுக்கு ஆளானதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தலைமை தாங்கி நடத்தியவர் என்று சந்தேகிக்கப்படும் உள் ளூர் கவுன்சில் தலைவரான சம்பத விதானப திரன என்றும் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு நெருக்கமா னவர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாலியல் வன்செயல மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் என்கிற குற்றச் சாட்டின் பேரில் கடந்த மாத இறுதியில் அவ ரும் வேறு சில அரசியல்வாதிகளும் கட்சிப் பதவிகள் பறிக்கப்பட்டு ஆளும் கட்சியிலி ருந்து நீக்கப்பட்டதாக அரசு தெரிவித்தது.

ஆனால் அவர் மீண்டும் கட்சியில் சேர்த் துக் கொள்ளப்பட்டுள்ளதாகக் காட்டும் ஒரு கடிதம் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட் டது. எனினும் அந்தக் கட்சியின் கருத்துக் களை பெற பிபிசியால் முடியவில்லை. இந் தச் சம்பவம் நடைபெற்று ஏழு மாதங்கள் ஆன பின்னர் ஏன் சட்டரீதியாக இந்தச் சம்ப வம் குறித்து குற்றச்சாட்டுக்கள் பதிவு செய் யப்படவில்லை என்று குர்ரம் ஷேக்கின் குடும் பத்தினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆனால் இது குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் யாருக்கும் சட் டத்திலிருந்து விலக்கு அளிக்கும் படியான செயற்பாடுகள் இருக்காது என்றும் இல ங்கை அரசின் சட்டமா அதிபரின் அலுவலகத் தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-8)

# பூனையைக் காப்பாற்ற முனைந்தவர் தனது உயிரை மாய்த்துக்கொண்டார்

(கொழும்பு)

கிணற்றினுள் வீழ்ந்த பூனை ஒன்றை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட நபர் ஒரு வர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் அளவை பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதா வது,

குறித்தநபர் 25 அடி ஆழமான கிணற் றில் வீழ்ந்த பூனையைக் காப்பாற்றுவதற் காக கிணற்றினுள் இறங்கியபோது மூச்சுத் திணறலுக்கு உள்ளானார்.

இதனை அங்கு கூடி நின்ற பொதுமக் கள் அறிந்து பாதிக்கப்பட்ட நபரைக் காப் பாற்றுவதற்காக மேலும் 4 பேரைக் கிணற் றினுள் இறக்கியபோது அவர்களும் மயக்க மடைந்ததாக பொலிஸார் தெரிவிக்கின் றனர்.

இவ்வாறு மாறிமாறிக் காப்பாற்றும் முய ற்சியில் நேரம் வீணாக்கப்பட்டதனால் பூனை யும் உயிரிழந்தது. இத்துயர சம்பவங்களி னால் அளவைப் பகுதி பிரதேசம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. (ந-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தட்டுவன்கொட்டி பிரதான வீதி இன்றுவரை புனரமைக்கப்படவில்லை

## ஆபத்தை எதிர்நோக்கி பயணிகள் பயணம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள தட்டுவன்கொட்டிக் கிராம சேவகர் பிரிவில் உள்ள ஆனையிறவு தட்டு வன்கொட்டி பிரதான வீதி இன்றுவரை புனர மைக்கப்படாதுள்ளது. இதனால் பயணம் செய்யும் பயணிகள் விபத்துக்களை எதிர் நோக்க வேண்டி உள்ளது.

குறிப்பாக இரணைமடுக்குளத்தின் கழிவு நீர் இப்பிரதான வீதியை ஊடறுத்தே சுண்டிக் குளம் கடற்பரப்பை அடைகின்றது.

இவ்வாறு ஊடறுத்து செல்லும் நீரே வீதியை மிக மோசமாக பாதிப்படையச் செய் துள்ளது.

பருவகாலமழைக்கு முன்னர் இவ்வீதியா னது புனரமைக்கப்படாது விட்டால் இந்நீ ரானது வீதியூடாகப் பாயும் போது போக்கு வரத்தை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படும்.

எனவே, உரியவர்கள் இவ்வீதியைப் புனர மைப்பதுடன் கழிவுநீரானது வீதியைப்பா திக்காது ஊடறுத்துச் செல்வதற்கும் ஆவன செய்யுமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-3-264)


# வரிப்பத்திரத்தைப் பெற வரும்போது கவனத்தில் கொள்ளவேண்டியவை

சங்கானைப் பிரதேச செயலக மோட்டார் ஊர்திப் பதிவகத்தால் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் மோட்டார் ஊர்திக்கான வருமான வரிப்பத்திரம் பெற வரும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மோட்டார் ஊர்தியின் பதிவுப் புத்தகம் யாழ்.மாவட்ட செயலகத்தில் பெற்ற வர்கள் வரி அனுமதிப்பத்திரத்தை பெற வருகை தரும்போது கறுப்பு வெள்ளைப்படம் தபால் முத்திரை அளவு இரண்டு கொண்டு வருதல் வேண்டும்.

அதில் ஒருபடத்தை வெள்ளைத்தாளில் ஒட்டி படத்துக்குரியோர் பற்றி கிராம சேவை யாளரிடம் உறுதிப்படுத்தி எடுத்து வருதல் வேண்டும்.

வரி அனுமதிப்பத்திரம் மின்சாரம் தடைப் படும் நாட்களில் காலை 9.30 மணி தொடக் கம் நண்பகல் 12 மணிவரையும் நண்பகல் 1.30 மணி தொடக்கம் பி.3.30 மணிவரையும் வழங்கப்படுமென அவ் அறிவித்தலில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-3-15)



இலங்கை வங்கியில் 18+ கணக்கினை நடைமுறைப்படுத்திய வாடிக்கையாளர் திருமதி தக்ஷாயினி தனுஷனின் திருமணவைபவத்தில் வங்கி முகாமையாளர் த.சந்திரகுமார் மற்றும் ஊழியர்களால் வங்கி சர்ர்பில் தங்க நாணயப் பரிசினை வழங்குவதைப்படத்தில் காணலாம்.

# தமிழ் அரசியல் கைதி கொலையுடன் தொடர்பானவர்களை கைது செய்யுங்கள்

## விநாயகமூர்த்தி எம்.பி.தெரிவிப்பு

சிறைச்சாலை அதிகாரிகளால் இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண் டும்.

மேலும் இக்கொலையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டுமென சிரேஷ்ட சட்டத்தர ணியும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பின ருமான அ.விநாயகமூர்த்தி பொலிஸ்மா அதிபருக்கு நேற்று முன்தினம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த நிமலரூபன் மற்றும் டில்ருக்ஷன் ஆகிய இரண்டு தமிழ் அரசியல் கைதிகளும் சிறைச்சாலைக் கைதிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

நிமலரூபன் 2 வாரங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். ராகம வைத்தியசாலையில் கோமா நிலையில் சிகிச்சை பெற்று வந்த டில்ருக்ஷன் பலியானார்.

இந்த இரண்டு அரசியல் கைதிகளும் சிறைச்சாலை அதிகாரிகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டனர்.மேலும் பல கைதிகள் படுகாயங்களுக்கு உள்ளாக்கப் பட்டனர். பலரது கை கால்கள் அடித்து முறிக் கப்பட்டன.

எனவே இச்சம்பவம் தொடர்பான நீதியான விசாரணையை மேற்கொண்டு இக் கொலை மற்றும் துன்புறுத்தல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தை செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இதற்குரிய நடவடிக்கைககளை மேற் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித் துள்ளார். (ந-2)

# முகாமை உதவியாளர் வகுப்பு-III இற்கான போட்டிப் பரீட்சை

மாகாண சேவையின் கனிஷ்ட ஊழியர் களை மாகாண முகாமை உதவியாளர் சேவை யில் வகுப்புIII இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை-2012 இற்கான விண்ணப்ஆமுடிவுத்திகதி எதிர்வ ரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக வடக்குமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலா ளர்இ. தியாகலிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், முன்னர் இப்பதவிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி கடந்த மே மாதம் 21 ஆம் திகதி என அறி விக்கப்பட்டும் பரீட்சை இம்மாதம் நடை பெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையி லேயே இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை நடைபெறும் திகதி பரீட்சார்த் திகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும் எனவும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க தவறியவர்கள் இக்கால நீடிப்பை பயன்படுத்திக்கொள்ளு மாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3-15)


பழந்தமிழர் இயக்கம் நடாத்தும்

**நூல் வெளியீட்டு விழா**

அமரர்களான கு.மனுவல் & நேசமலர் மனுவல் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்ட

அருட்திரு V.P தனேந்திரா அவர்களால் எழுதப்பட்ட

"சமூகமாற்றத்திற்கு வித்திட்டவர்கள்"

காலம்:- 11.08.2012 அன்று சனிக்கிழமை மாலை 5.30 மணி

இடம்:- அரியாலை காந்தி நிலைய வெள்ளிவிழா அரங்கு

தலைவர்

திரு.ம.வித்தியானந்தநேசன்

(மாவட்ட புள்ளிவிபரவியலாளர் மாவட்டச் செயலகம் மன்னார் நிறுவுனர்- பழந்தமிழர் இயக்கம்)

பிரதம விருந்தினர்

பேராசிரியர் V.K கணேசலிங்கம்

(தலைவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை)

கௌரவ விருந்தினர்கள்

பேராசிரியர் R. சாந்தன்

(பேராதனைப் பல்கலைக்கழகம், சர்வதேச லயன்ஸ் கழக பிராந்திய இணைப்பாளர் மாவட்டம் 306B1)

திருமதி மீரா அருள்நேசன்

(உதவிக்கல்விப் பணிப்பாளர் யாழ். வலயம்)

திரு D.G ஆனந்தன்

(Head Of Enterprise Business ,VSIS)

அருட்திரு I.D.டிக்சன்

(பரி .யாக்கோபு ஆலயம் நல்லூர்)

அருட்திரு V.P.தனேந்திரா

(ஆசிரியர் பரி.யோவான் கல்லூரி)

திரு.ம.மங்களநேசன்

(யாழ்.மாநகரசபை உறுப்பினர்)

திரு சி.கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

திருS.தர்மராஜா

(இணைப்பாளர் பழந்தமிழர் இயக்கம் சுவிஸ்கிளை)

திருகா.ஜெயராஜசிங்கம்

(தலைவர் கா.ச.ச.நிலையம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பழந் தமிழர் இயக்கம்

(198)


# ஆசிய நாடுகளின் சமாதானத்திற்கு இலங்கை படையின் பங்களிப்பு மகத்தானது

## ஜீ.எல்.பீரிஸ் புகழாரம்

ஆசியான் பிராந்திய வலய நாடுகளில் சமாதானத்தை நிலை நாட்ட இலங்கைக் கடற்படையின் வழங்கி வரும் பங்களிப்பானது மகத்தானது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித் துள்ளார்.

ஆசியான் அமைப்பின் 45 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

சட்டவிரோத ஆட்கத்தல் நடவ டிக்கைகளினால் ஆசிய பிராந்திய வலயநாடுகளுக்கு பாரியளவில் பொருளாதார மற்றும் சமூக நெருக் கடிகள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட் டுள்ளார்.

கடல் மார்க்கமாக மேற்கொள் ளப்படும் சட்டவிரோத செயற்பாடு களைகட்டுப்படுத்த இலங்கைக் கடற்படையினர் பல்வேறு வழிக ளில் காத்திரமான பங்களிப்பை வழ ங்கிவருவதாகத் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் கடத்தல், போதைப் பொ ருள் கடத்தல் கட்டவிரோளு ஆட்கடத் தல் போன்ற குற்றச் செயல்களை தடுக்க இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துவருவதாக குறிப்பிட்டுள்ளார். (ந-2)

# தேர்தல் நடவடிக்கைகளில் 500 அரச வாகனங்கள்

தேர்தல் நடவடிக்கைகளுக் கென தற்போது 500 அரச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக ஐக் கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐ.தே.க. பாராளு மன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரி யெல்ல இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அரச அமைச்சர்கள் எம் பிக்களின் உறவினர்கள் 10 பேரும் பிரதேச சபை தலைவர்கள் 10 பேரும் போட்டியிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

இந்த நிலையில் அரச வாக னங்கள் தேர்தல் பிரசார நடவடிக் கையில் பயன்படுத்தப்பட்டு வருவ தாக லக்ஸ்மன் கிரியெல்ல கூறியு ள்ளார்.

இது குறித்து பொலிசாரும் தேர்தல்கள் செயலகமும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-2)

# கிளிநொச்சி மாவட்ட (உ/த) பரீட்சார்த்திகள்

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு பழைய பாடத்திட்டத்தில் 266 பேரும் புதிய பாடத்திட்டத்தில் 848 பேரும் தோற்றுகின்றனர்.

இவற்றில் 746 பாடசாலை மாணவர்களும் 368 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உள்ளனர்.

இப்பரீட்சைக்கு எட்டு இணை ப்பு நிலையங்களும் 13 பரீட் சைநிலையங்களும் செயற் படுத் தப்படுகின்றன எனவும் எவ்வித அசம்பா விதங்களும் இன்றி பரீட்சைகள் நடைபெறு வதாகவும் கிளிமாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர் க.முரு கவேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எதிர் வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடை பெறவுள்ள 5ஆம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட்சைக்கு 2ஆயி ரத்து307 மாணவர்கள் கிளி நொச்சி மாவட்டத்தில் இருந்து தோற்றவுள்ளனர்.

இப்பரீட்சைக்கென 10 இணை ப்பு நிலையங்களும் 28 பரீட்சை நிலையங்களும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (ந-3-254)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றை சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நல்லூர்த் திருவிழாவில் தெய்வீகத்தைப் பேணுங்கள்

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவப் பெருவிழா பத்தொன்பதாவது நாளை எட்டியுள்ளது.

ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையும் காண முடிகின்றது.

ஆலயச் சூழலில் தெய்வீகத் தன்மையைப் பேண வேண்டும் என்பது குறித்து ஏற்கெனவே இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

இது விடயத்தில் எமது இளைஞர்களின் ஒத்துழைப்புத் தாராளமாக வேண்டும் என்பதுடன் அந்த ஒத்துழைப்புக் கிடைத்து வருகின்றது என்பதிலும் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

அதேசமயம் நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலத்தை முன்னிட்டு எழுந்துள்ள வர்த்தக நடவடிக்கைகளில் இசைக்கப்படுகின்ற பாடல்கள் தெய்வீக இசையாக – பக்திப் பாடலாக இருப்பது பொருத்துடையது என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும்.

ஆலயத்திற்கு வருகின்றவர்கள் மற்றும் ஆலயத்தில் இருந்து வீடு நோக்கிச் செல்கின்றவர்கள் பக்திபூர்வமான சூழமைவை அனுபவிப்பவர்களாக இருக்க வேண்டும்.

அதற்கு ஏற்றதாக பக்திப் பாடல்களை இசைப்பது அல்லது அமைதியான சூழலைப் பேணுவது அவசியமாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக அடியார்கள் வீதிகளில் செல்வதற்கான ஒழுங்கமைப்பில் பொலிஸாரின் ரோந்துப் பணி இருப்பது நல்லதெனக் கருதப்படுகின்றது.

மாலைத் திருவிழா நிறைவுற்று சுமார் 2 மணித்தியாலம் வரையில் நல்லூர் ஆலயம் அமைந்துள்ள அத்தனை வீதிகளிலும் சனக் கூட்டம் நெரிசலாக இருப்பது வழக்கம்.

இதன்போது இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக நடு வீதியில் நின்று கதைத்துக் கொண்டிருப்பது, ஆலயத்திற்கு வந்த அடியார்கள் உள்ளும் புறமும் செல்வதில் பெரும் இடைஞ்சலை ஏற்படுத்துகின்றது.

நடுவீதியில் நின்று கதைக்கின்ற இளைஞர்களிடம், தம்பியுவை; வீதியில் நின்று கதைக்காதீர்கள்; வீதியால் செல்கின்றவர்களுக்கு இது இடைஞ்சல் என்று கூறினால் அது பெரும் பிரச்சினையாகிவிடும்.

ஆகவே, இதனை அதிகாரம் உள்ளவர்கள் கூறுவதே பொருத்துடையது.

எனவே தொடர்ந்துவரும் விசேட திருவிழாக்களின்போது நல்லூருக்கு வருகின்ற அடியார்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால், வீதித் தடை இடப்பட்டுள்ள ஆலய வளாகத்திற்குள் அடங்கின்ற அத்தனை வீதிகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு அடியார் கூட்டம் எதுவித இடைஞ்சலும் இன்றி விரைவாக தங்கள் இருப்பிடத்திற்கு செல்வதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

அதேநேரம் பொலிஸார் குறித்த வீதிகளில் சுற்றிவருவதும் அவசியமாகும்.

நல்லூர்க் கந்தப் பெருமானின் மகோற்சவ காலத்தில் லட்சோபலட்ச மக்கள் ஆலயத்திற்கு வருவதனால் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகள் அவசியமானவை என்பது மறுப்பதற்குரியதல்ல.

# 2006 இல் காணாமல்போன 180 பேரின் நிலை தொடர்பில் எவ்வித தகவல்களும் இல்லை

## மனித உரிமைகள் காரியாலய யாழ்.இணைப்பாளர் தகவல்

கடந்த 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல் போனவர்களில் 180 பேரின் நிலைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டின் பின்னர் எந்த விதத் தகவல்களும் இதுவரை வழங்கப்படவில்லை என இலங்கை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தின் இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கைமனிதவுரிமைகள்ஆணைக் குழுவின் யாழ்.பிராந்தியக்காரியாலயத் தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ்.கிறீன்கிராஸ் ஹோட்டலில் சிவில் சமூகங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் பலர் காணாமல் போயுள்ளனர் என பொலிஸ் நிலையங்களிலும் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அவர்கள் தொடர்பில் தகவல் சேகரிப்பதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் காரியாலயம் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது. இதன்படி கடந்த 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனவர்கள் தொடர்பில் முதற்கட்டமாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயுள்ளனர் என முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி முறைப்பாடு செய்தவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வகையில் முறைப்பாட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தோம். இருப்பினும் முறைப்பாட்டாளர்களில் பலர் சமுகமளித்திருக்கவில்லை. அத்தோடு காணாமல் போனவர்கள் எனச் சொல்லப்பட்டவர்களில் பலர் வெளி நாடு சென்றுள்ளனர். மேலும் 180 பேரின் நிலைவரம் தொடர்பில் இது வரை எந்தத் தகவலும் பெறப்படவில்லை.

காணாமல் போனவர்கள் எனச் சொல்லப்பட்ட இவர்கள் மீண்டும் வீடு திரும்பி வந்துவிட்டனரா? அல்லது வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டனரா? என்பது தொடர்பில் எந்தத் தகவலும் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவில்லை.

இதனால் இவர்கள் தொடர்பில் பொதுவானதொரு முடிபிற்கு மனிதவுரிமைகள் ஆணைக்குழு வரமுடியாதநிலை யேற்பட்டுள்ளது. இருப்பினும் முறைப்பாட்டாளர்கள் தொடர்பில் அந்தந்தக் கிராம சேவையாளரூடாக தகவல் திரட்ட நாம் திட்டமிட்டுள்ளோம்.

இந்தக்காலப்பகுதியில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போயிருந்தனர் என முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் 128பேர் திரும்பிவந்துள்ளனர்.

மேலும் கடந்த காலங்களைப் போன்று காணாமல் போனவர்கள் தொடர்பில் முறைப்பாடு வருவது மிகவும் குறைவு. தற்போது வரும் முறைப்பாடுகள் காதல் விவகாரத்துடன் தொடர்புபட்டதாகவே உள்ளது.

இதுவரை 15முறைப்பாடுகள் காணாமல் போதல் தொடர்பில் கிடைக்கப் பெற்ற போதும் அதில் 8 பேர் திரும்பி வந்துள்ளனர்.

அத்தோடு காணாமல் போனவர்களின் வயதெல்லை 17, 18, 19 வயதுக் குட்பட்டவர்களாகவே இருக்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

# ஆசிரிய கலாசாலை பரீட்சை (பழைய)

ஆசிரிய கலாசாலை பரீட்சை (பழைய பாடத்திட்டம்)கடைசி முறையாக இம் முறை நடத்தப்படவுள்ளதாகவும் இனி வரும் காலங்களில் நடத்தப்படமாட்டாது எனவும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே ஆசிரிய கலாசாலை பரீட் சைக்கு தோற்றாதவர்களும் நூனசித்தி பெற்றவர்களும் உடனடியாக அலுவலகத்திற்கு சமுகமளித்து விண்ணப் பங்களைப் பூரணப்படுத்தி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் கேட்டுள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் பரீட்சை ஆணையாளர் கேட்டுள்ளார். (ந-9)

# வரவு செலவுத் திட்டத்திலிருந்து மதத்தலங்களுக்கு நிதியொதுக்கீடு

(மல்லாவி)

அரசாங்கத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டநிதியில் இருந்து மதஸ்தலங்கள் புனரமைப்புச் செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திற்கு கிடைத்துள்ள நிதியினை யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதேச செயலகங்கள் ஊடாக மதஸ்தலங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை பிரதேச செயலகத்தில் கலாசார உத்தியோகத்தரின் தலைமையில் மதஸ்தலங்களின் நிர்வாகத்தினருக்கான கூட்டம் நடைபெற்றது.

இதில் பண்ணாகம் விசுவர்த்தன முருகமூர்த்தி ஆலய புனரமைப்பிற்கு ரூபாய் 38 ஆயிரத்து 800 ஒதுக் கப்பட்டுள்ளதாக ஆலயத்தின் அறங் காவலர் சபைத் தலைவர் நா.க. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். (ந-3-15)

# மின்சாரம் தடைப்படும்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய், மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனைத்துக் கிராமங்களுக்குமான மின்சாரம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 5மணிவரை தடைப்படுமென முல்லை.மாவட்ட மின் அத்தியட்சகர் ப.செந்தில்செல்வன் அறிவித்துள்ளார்.

இப்பகுதிகளில் மின்னிணைப்பு வேலைகள் நடைபெறவுள்ளதால் மின்சாரம் தடைப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3-15)

# வெள்ளிவிழா நிகழ்வும் மலர் வெளியீடும்

(பருத்தித்துறை)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 25ஆவது வருட நிறைவு வெள்ளிவிழா நிகழ்வும் மலர் வெளி யீடும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க மண்டப அரங்கில் சங்கத் தலைவர் க.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராகயாழ் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். மற்றும் சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர் கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.(ந-3-10)

# விவேகானந்தர் விழைந்த மனித குலத்தொண்டு!



சமயம் என்பது தனி மனிதனுடைய ஆன்ம ஈடேற்றம், வீடு பெறுதல் என்று மட்டும்தான் கருதப்பட்டது. மிக உயர்ந்த பண்பாடுள்ள சமயத் தலைவர்கள் இருந்தார்கள். தங்களையே அர்ப்பணித்துவிட்டவர்கள்கூட இருந்தார்கள். ஆனால் சமயவழி என்று சொன்னால் பெரும்பாலும் அந்த எண்ணம் தங்களுடைய ஆன்ம ஈடேற்றம், இறைவனிடம் பற்றுதல் கொண்டு தாங்கள் தேடிக் கொள்ளும் வீடுபேறு, இறைவனடி சேர்தல் என்ற எண்ணங்கள் மட்டுமே மேலோங்கி இருந்தது.

அப்படிப்பட்ட சமூகத்தில் ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் கௌதமபுத்தர் தோன்றி சமூகத்தின் நல்வாழ்விற்காகவே சமயத்தை உருவாக்கவேண்டும் என்று விரும்பியதைப்போல சுவாமி விவேகானந்தர் அவருடைய குரு ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆன்மீக உணர்வைத் தமது உள்ளொளியாகப் பெற்ற நிலையிலும் மக்களுக்கு வாழும் வழி காட்டுகிற அரியதொரு சமுதாயக்கடமையில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.விழிமின்! எழுமின்! அச்சந்தவிர்த்து கடமை ஆற்றுமின்! என்பது அவரது முழக்கமாக இருந்தது.

விவேகானந்தருக்கு முன்னர் வேறு சிலர்கூடச் சமூகச் சீர்திருத்தம் குறித்துப் பேசியிருக்கலாம். ஆனால் சமூக உணர்வோடு சமயத்தைப் பார்த்த பெருமை விவேகானந்தருக்கு உண்டு. அவர் ஆண்டவரை உணர்ந்த நிலையிலேகூட மனிதனை மறக்கவில்லை. இறைப் பற்றுக்குத் தன்னை ஒப்படைத்த போதுகூட ஏழைகளிடத்திலே காட்டவேண்டிய பற்றையும் ஆற்றவேண்டிய கடமையையும் மறக்கவில்லை. இறைவன் எல்லோருடைய துன்பத்தையும் போக்குவான் என்னும் நம்பிக்கையுடைய விவேகானந்தர், வறுமையும் பட்டினித்துயரும் துன்பங்களும் போக்கப்படாத மனிதனுக்கு நாம் கடமைப்பட்டவர்கள் அல்லவா என்று கேட்கின்ற நிலையிலேயே இருந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கைதடி மின்னொளி விளையாட்டு கழகத்தின் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

(வேலணை)

வடமாகாண ரீதியில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரப்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது. இத் தொடரின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதியது. 5 சுற்றுக்களைக்கொண்ட இப்போட்டி மிகவும் விறுவிறுப்பான போட்டியாக அமைந்தது. முதல் சுற்றை ஆவரங்கால் மத்தி சிறப்பாக விளீயாடி 25:19 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரண்டாம் சுற்றில் யாரும் எதிர்பார்க்காத வண்ணம் தமது திறமையை வெளிப்படுத்தி புத்தூர் கலைமதி 25:11 என்ற கணக்கில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது. மூன்றாம் சுற்று இரு அணி ரசிகர்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் ஆரம்பமானது. தொடர்ந்து தமது ஆதிக்கத்தை வெளிப் படுத்திய புத்தூர் கலைமதி 25:21 என்ற கணக்கில் கைப்பற்றியது. நான்



காம் சுற்று ஆவரங்கால் மத்தி பதிலடி கொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஆவரங்கால் மத்தி பதிலடி கொடுக்கும் என்ற நம்பிக்கையில் ஆவரங் கால் மத்தி ரசிகர்களும் நான்காம் சுற்றை கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு செல்லும் என்ற எதிர்பார்ப்புடன் புத்தூர் கலைமதி ரசிகர்களும் காணப்பட நான்காம் சுற்று ஆரம்ப மானது. புத்தூர் கலைமதி ரசிகர்களின் எண்ணம் போல புத்தூர் கலைமதி 25:17 என்ற கணக்கில் கைப்பற்றி இறுதிப் போட்டி க்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது. முதலாவது சுற்றை சிறப்பாக ஆடி ஆவரங்கால் இந்து இளைஞர் 25:20 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரண்டாம் சுற்றில் இரு அணிக ளும்சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த போட்டி இறுக்கமான நிலையை அடைந்தது. இறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் 27:25 என்ற கணக்கில் கைப்பற்றினர். மூன்றாம் சுற்றிலும் தமது ஆதிக்கத்தை வெளிப்படுத் திய ஆவரங்கால் இந்து இளைஞர் 25:22 என்ற கணக்கில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றது. இன்று சனிக் கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத்துடன் மோதவுள்ளது.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகத்தினரால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற அணிக்கு 6 பேர் கொண்ட மென் பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டி இவ்வருடமும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை கொக்குவில் பொற்பதி அறிவாலயத்திலும் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஒலிம்பியா ஸ்போட்ஸ் இலும் பெற்று எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பூரணப்படுத்தி மீள ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றார்கள்.

மேலதிக விபரங்களுக்க 077 2370259/077 5590169 இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

# வவுனியா பிறிமியர் லீக் 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி

vpl Vavuniya Premier League

(வேலணை)

செவ்வானம் விளையாட்டுக்கழகம் வவுனியா மண்ணில் முதன்முறையாக நடத்தும் வவுனியா பிறிமியர் லீக் 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

இவ்வெற்றிக் கிண்ணத்தை வெற்றி கொள்ளும் நோக்கோடு 12 அணிகள் பங்கு பற்றவுள்ளன. அவ்வணிகள் நான்கு பிரிவாக பிரிக்கப்பட்டு ஒரு அணியோடு ஒருமுறை மோதவுள்ளது. முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு தெரிவாகும்.

மொத்தமாக 28போட்டிகள் நடைபெறவுள்ளன. அவ்வணிகளின் விபரம் வருமாறு

குழு A

யுனிபைட் விளையாட்டுக்கழகம், தமிழ்யூனியன் விளையாட்டுக்கழகம், வடதாரகை விளையாட்டுக்கழகம்,

குழு B

பிறண்ட்ஸ் விளையாட்டுக்கழகம், நியூபைட் விள்ளயாட்டுக்கழகம், கலைமகள் விளையாட்டுக்கழகம்,

குழு C

ஜங்ஸ்டார் விளையாட்டுக்கழகம், றெக்றேசன் விளையாட்டுக்கழகம், விபிஎ விளையாட்டுக்கழகம்,

குழு D

செவ்வானம் விளையாட்டுக்கழகம், வானவில் விளையாட்டுக்கழகம், குட்ஸ்டார் விளையாட்டுக்கழகம்

2012 ஆம் ஆண்டிற்கான வவுனியா பிறிமியர் லீக் 20-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் யுனிபைட் விளையாட்டுக்கழகமும் வடதாரகை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# வடமாகாணத்தில் கடற்கரை கரப்பந்தாட்டம்

(வேலணை)

வடமாகாண விளையாட்டுப் போட்டி வரும் 16,17,18 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை தெரிவித்துள்ளார்.

முதற்தடவையாக வடமாகாணத்தில் நடைபெறவுள்ள கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அணிகள் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விளையாட்டை வடமாகாணத்தில் பிரபல்யமடையச் செய்து எமது வீரர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் வடமாகாண ரீதியில் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கு வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை மேலும் தெரிவித்தார்.

அத்துடன் வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெறும் அணிகள் அடுத்த வாரம் மாரவில கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ள தேசியமட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகளிலும் பயிற்சிப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளதாக மேலும் குறிப்பிட்டார்.

## விளையாட்டுச் செய்திகள்....

### கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன், மோகனதாஸ் இன்று மோதல்

(வேலணை)

கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கரப்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு பிரிவாக நடாத்தப்படும் தென்மராட்சி பிரதேசங்களிற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. 5 சுற்றுக்களைக் கொண்ட முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் மறவன்புலவு அம்பிகை விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலாவது சுற்றில் தனது அபார ஆட்டத்திறனை வெளிப்படுத்தி மட்டுவில் ஐங்கரன் 25:11 என்ற கணக்கில் எளிதாக கைப்பற்றியது. இரண்டாவது சுற்றிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய மட்டுவில் ஐங்கரன் 25:18 என்ற கணக்கில் கைப்பற்றியது. மூன்றாம் சுற்றிலும் தொடர்ந்து மட்டுவில் ஐங்கரன் ஆதிக்கத்தை செலுத்தி 25:19 என்ற கணக்கில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தோடு இறுதியில் பலப்பரீட்சை நடத்தவுள்ள அணி எதென்பதை தீர்மானிக்கும் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதலாவது சுற்றை சிறப்பாக ஆடி மட்டுவில் மோகனதாஸ் 25:18 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரண்டாம் சுற்றில் பதிலடி கொடுத்த மட்டுவில் வளர்மதி 25:22 என்ற கணக்கில் கைப்பற்றி போட்டியை விறுவிறுப்பாக்கியது. மூன்றாம் சுற்றில் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்திய மட்டுவில் மோகனதாஸ் 25:16 என்ற கணக்கில் கைப்பற்றியது. நான்காம் சுற்றிலும் அபாரமாக ஆடிய மட்டுவில் மோகனதாஸ் இன்று சனிக்கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தோடு மோதவுள்ளது.

# உதயதாரகையின் உதைபந்தாட்டம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனு மதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பருத்தித் துறை லீக் இற்கு உட்பட்ட கழகங்கள் மோத வுள்ளன.

இதில் கற்கோவளம் உதயதாரகை விளை யாட்டுக்கழக மைதானத்தில் இன்றைய தினம்நடைபெறும் ஆட்டத்தில் பி.ப. 3.30 மணிக்கு கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விண்மீன் விளை யாட்டுக்கழகம் மோதவுள்ளது.

சிவானந்தா A அணியை எதிர்த்து பருத் தித்துறை ஐக்கிய B விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (3)



அகில இலங்கைப் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாணம் ப்ல்கலைக்கழக அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. அணியில் இடம்பெற்ற வீரர்கள் தமது பயிற்றுவிப்பாளருடன் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாய்மரப் படகுப் போட்டியில் அவுஸ்திரேலிய ஜோடி தங்கம்



லண்டன் ஒலிம்பிக் பாய்மர படகுப் போட்டியின் 470 பிரிவில் அவுஸ்திரேலிய ஜோடி தங்கப்பதக்கத்தை வென்றது.

லண்டனில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர் 470 பிரிவுக்கான பாய்மர படகுப் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலிய ஜோடியான மாத்யூவ் பெல்சர் மால்கால்ம் பேஜ் ஆகியோர் தங்க பதக்கம் வென்றனர்.

பிரிட்டன் ஜோடியான லுகா பேட்டியன்ஸ், ஸ்டுவர்ட் பித்தேல் வெள்ளிப்பதக்கத்தையும், ஆர்ஜென்டின ஜோடியான லுகாஸ் கலப்பிரேஷ், ஜுயன் டி லா வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

# மின்னல் வேக வீரர் உசைன் போல்ட் 200 மீற்றர் தடகளத்தில் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் மின்னல் வேக வீரரான ஜமேக்காவின் உசைன் போல்ட் மீண்டும் தங்கப்பதக்கத்தை வென்று தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.




லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தடகள போட்டியில் ஆடவருக்கான 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் அனைவரும் எதிர் பார்த்தது போலவே ஜமேக்காவின் உசைன் போல்ட் 19.32 வினாடிகளில் 200 மீற்றரை கடந்து தங்கப்பதக்கத்தைச் தட்டிச் சென்றார்.


அவரது சக நாட்டு வீரரான ஜோஹன் பிளேக் 19.44 வினாடிகளில் இலக்கைக் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும் ஜமேக்காவின் மற்றொரு வீரரான வரன் வெய்ர் 19.84 வீனாடிகளில் கடந்து வெண்களப் பதக்கத்தை யும் வென்றனர்.

ஏற்கெனவே நடைபெற்ற 100 மீற்றரிலும் போல்ட் தங்கப்பதக்கத்தையும் யோஹன் பிளேக் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் தண்ணீர் பந்து அமெரிக்கா முதல் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் போட்டியின் தண்ணீர் பந்து போட்டியில் அமெரிக்க மகளிர் அணி தங்கப் பதக்கத்தை வென்றது.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் கடந்த 5ஆம் திகதி தொடங்கிய தண்ணீர்



பந்து போட்டியின் இறுதிசுற்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

அமெரிக்க மகளிர் தண்ணீர்பந்து அணியானது ஸ்பெயின் நாட்டின் தண்ணீர்பந்து அணியினரை 8:5 என்ற புள்ளிகளில் வென்று தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றது.

இரண்டாவதாக வந்த ஸ்பெயின் மகளிர் தண்ணீர்பந்து அணியினர் வெள்ளிப்பதக்கத்தையும் மூன்றாவதாக வந்த அவுஸ்திரேலிய தண்ணீர்பந்து அணியினர் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர். மேலும் ஒலிம்பிக் தண்ணீர் பந்து போட்டியில் அமெரிக்கா வென்ற முதல் தங்கப்பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்று அதிகாலை வரையான நிலைவரப்படி

LONDON 2012

# ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்


| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 39 | 25 | 26 | 90 |
| சீனா | 37 | 25 | 19 | 81 |
| பிரிட்டன் | 25 | 15 | 16 | 56 |
| ரஷ்யா | 14 | 21 | 24 | 59 |
| தென்கொரியா | 12 | 07 | 06 | 25 |
| ஜேர்மனி | 10 | 17 | 11 | 38 |
| பிரான்ஸ் | 8 | 9 | 12 | 29 |

# லண்டன் ஒலிம்பிக் டைவிங் சீன வீராங்கனை தங்கம்

லண்டன் ஒலிம்பிக் டைவிங் போட்டியில் 10 மீற்றர் பிளாட்பாம் பிரிவில் சீன வீராங்கனை ருயோலின் சென் தங்கப்பதக்கத்தை வென்றார்.

இது இவர் லண்டன் ஒலிம்பிக்கில் வெல்லும் இரண்டாவது தங்கப்பதக்கம் ஆகும்.

அவுஸ்திரேலியா நாட்டு வீராங்கனையான பிரிட்டானி ப்ரோபேன் 366.50 புள்ளி



லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கில் மகளிர்க்கான 10 மீற்றர் பிளாட்பாம் டைவிங் இறுதிப்போட்டி அக்வாடிக் சென்றரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.


இதில் சீன நாட்டு வீராங்கனையான ருயோலின் சென் 422.30 புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றார்.

கள் பெற்று வெள்ளிப்பதக்கமும் மலேசியா நாட்டு வீராங்கனையான ரினோங் பாம்ங் 359.20 புள்ளிகள் பெற்று வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர்.

மேலும் டைவிங் போட்டியில் சீனா வெல்லும் ஆறாவது தங்கப்பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# உலகக்கிண்ண இருபது–20 தொடரில் யுவராஜ் சிங்

எதிர்வரும் செம்டெம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேச கிரிக்கெட்சபையின் உலக இருபது-20 தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.



அறிவிக்கப்பட்டுள்ள அணியின் இந்திய அணியின் சகலதுறை வீரர் யுவராஜ் சிங் இணைக்கப்பட்டுள்ளார்.

புற்று நோய்காரணமாக சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்த யுவராஜ் சிங் உடல் தகுதியை நிரூபித்ததை அடுத்தே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யுவராஜ் சிங் தவிர ஹர்பஜன் சிங், தமிழக வீரர் லக்ஷ்மிபதி பாலாஜி, பியூஸ் சாவ்லா ஆகியோரும் இந்திய அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியில் சில காலங்களாக முக்கிய சகலதுறை வீரர்களாக விளங்கிய யூசுப்பதான், ரவீந்திர ஜடேஜா ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அறிவிககப்பட்டுள்ள அணி நியூசிலாந்துக்கு எதிரான இருபது-20 போட்டிகள், சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக இருபது-20 தொடர் ஆகியவற்றில் பங்கு பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா அறிக்கையில் சந்தேகம் உண்டு

## மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்ந்தும் சந்தேகத்திற்கு இடமாகவே காணப்படுகின்றது என அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கைக்காக திரட்டப்பட்ட சாட்சியங்கள் பற்றிய தெளிவான தகவல்கள் கிடையாது என அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு சர்வதேச பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சாட்சியங்கள் பற்றிய தகவல்களை வெளியிட 20 ஆண்டு கால அவகாசம் தேவை என்ற ஐக்கிய நாடுகளின் நிபந்தனை ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தோருக்கு ஆதரவு அளிக்கும் நாடுகளில் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசாரங்களை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கத் தவறின் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் வழமை நிலையைக் கொண்டுவருவதிலும் பாதகமான விளைவுகள் ஏற்பட்டு அவை தடைப்பட்டு போகலாம் எனவும் அவர்குறிப்பிட்டுள்ளார். (ந-8;11)

# அரசியல் கைதியின் உடல்...

காணப்படல் வேண்டும் என்றும் அத்தோடு வாத்திய(பான்ட்) முழக்கமின்றி அடக்கம் செய்வதற்கும் யாழ். நீதிமன்ற அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதனைப் பரிசீலித்த யாழ்.நீதிவான் மா.கணேசராஜா, பொலிஸாரினால் குறிப்பிடப்பட்ட அனைத்துக் கட்டுப்பாடுகளுக்கும் அனுமதி வழங்கியதோடு நேற்றைய தினமே சடலத்தினை அடக்கம் செய்யுமாறும் உத்தரவிட்டிருந்தார்.

இதனால் நேற்றைய தினம் சடலத்தினை அடக்கம் செய்வதற்கான கால அவகாசம் போதாமையினாலும், யாழ்.நீதிமன்றினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை தளர்த்தும் முகமாகவும் நகர்த்தல் பத்திரம் மூலம் குறித்த வழக்கு நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதில் மரணமடைந்த இளைஞன் சார்பில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகத்தின் அனுசரணையுடன், சட்டத்தரணிகளான பார்த்தீபன், சுகாஷ், ஸ்ரெலஸ்ரின் ஆகியோருடன் பாதிக்கப்பட்டவர்களின் நலன்களை கவனிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது சடலத்தை நேற்றைய தினம் அடக்கம் செய்வதில் உள்ள இடர்பாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதோடு, உயிரிழந்தவர் கிறிஸ்தவ சமயமாக இருப்பதால் பான்ட் வாத்தியம் கட்டாயம் இசைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் அவர் சிறந்த கால்பந்து வீரர் ஆகையால் அவருக்கு நிறைய நண்பர்கள் இருக்கக்கூடும் என்பதனாலும் குடும்பம் மட்டுமே ஊர்வலத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தி அனைவரும் பங்கு கொள்வதற்கும் அனுமதி வழங்குமாறும் கோரியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கினை ஆராய்ந்த யாழ்.நீதவான் மா.கணேசராஜா சடத்தினை நாளை (இன்று) அடக்கம் செய்வதற்கு உத்தரவிட்டதோடு மரண ஊர்வலத்திற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டினையும் தளர்த்தினார்.

இதனடிப்படையில் பாசையூர் அந்தோனியார் ஆலயத்திற்கு மாலை 3 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மாலை 4 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது. (ந-4)

# மன்னிப்புக்...

குறித்த ஒரு இடத்தில் காணப்பட்ட உள்ளூர் விவகாரத்தோடு மட்டுப்படுத்திய பிரச்சினை பற்றியதாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக குறித்த பின்னணியில் இருந்து விலகிய எனது சொற்பிரயோகம் எமது மக்களின் பிரதான சமயமான பௌத்தத்தின் பாதுகாவலர்களான மகா சங்கத்தினர் பற்றி தரக் குறைவான கருத்துரைத்தது போன்று அமைந்துவிட்டது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில் நான் எப்போதும் முஸ்லிம்கள் இலங்கை தேசத்தின் ஒன்றிணைந்த பகுதியினர் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கின்றேன்.

நாம் சிங்கள அரசர்கள் காலத்தில் இருந்து சிங்கள மக்களின் அரவணைப்பையும், தாராள மனப்பான்மையையும் அனுபவித்துள்ளோம்.

போர்த்துக்கேய ஆக்கிரமிப்பாளர்களால் துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவு வழங்கிய செனரத் அரசனின் காலத்தில் இருந்து சிங்கள பௌத்தர்கள் கடைப்பிடித்து வரும் பன்மைவாதக் கொள்கையை பற்றி சில மாதங்களுக்கு முன் சர்வதேச தாராண்மைக் கவுன்சிலில் பேசியபோது நான் எடுத்துரைத்தேன்.

பௌத்தர்களுடனும், ஏனைய சமயத்தவர்களுடனும் பூரண ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்னும் முஸ்லிம்களின் விருப்பம் பற்றி நான் நன்கு அறிவேன்.

இதுவே சிறிலங்கா தேசத்தில் முஸ்லிம்கள் முழுமையாக இணைந்துகொள்ளவுள்ள ஒரே பாதையாகும் என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்த ஜனாதிபதி, அதேபோன்று சகல பயங்கரவாதங்களையும் ;அது காவியுடைப் பயங்கரவாதமாயினும் தோற்கடிப்பது வரவேற்கத்தக்கது என ஹக்கீம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# தமிழ் அரசியல்...

சிறைச்சாலைக் கலவரத்தை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 30 கைதிகளில் ஒருவராவார்.

ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் ஓகஸ்ட் 8ஆம் திகதி உயிரிழந்தார்.

யாழ்.நீதிவானிடம் கட்டளையொன்றைப் பொலிஸார் பெற்றதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகன உறுதிப்படுத்தினார்.

எனினும் குடும்ப உறுப்பினர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் நோக்கத்துடன் அந்தக் கட்டளை பெறப்படவில்லை எனவும், இந்நிகழ்வு அரசியல் கிளர்ச்சியாக மாற்றப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் பெறப்பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.

மரணச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது.

ஆனால் இந்த இறுதிச் சடங்கையொட்டி அரசியல் பேரணிகள், உரைகள் நடத்துவது தடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார். (ந-11)

# இலங்கைத் தமிழர்...

ஐ.நா.மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் யுத்த பாதிப்புக்குள்ளான தமிழர்களின் வாழ்க்கைச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து இவ்விவாதத்தில் விரிவாக விவாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

அத்துடன் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான உறவில் தமிழீழ ஆதரவாளர்களின் மாநாடு (டெசோ) எவ்வாறு செல்வாக்கு செலுத்தும் என்பது குறித்தும் இந்த விவாதத்தின்போது முக்கிய அவதானம் செலுத்தப்படும் எனக் கூறப்படுகின்றது. (ந-8)


## உடன் விற்பனைக்குண்டு

1. உழவு இயந்திரம் - 49- XXXX 270-XXXX
2. வான் (KB -VVJC 23) -NPJF-XXXX (NISSAN)
3. மோட்டார் சைக்கிள் - NPVV- XXXX (PASSION PRO)

மேற்குறிப்பிட்ட வாகனங்கள் உடன் விற்பனைக்குண்டு.

விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

திங்கள் -வெள்ளி காலை 9.00 - மாலை 4.00 வரை

0212221898, 0212221900, 0757182184

-Trade Finance & Investments PLC


# டெசோ மாநாட்டுக்கு...

டெசோ மாநாடு நடத்த அனுமதி அளிக்கக் கூடாது என்றும் அந்த அமைப்புக்கு எதிராக தேசிய பாதுகாப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி வழக்கறிஞர் பாலசுப்பிரமணியம் என்பவர் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் எலிப்பி தர்மராவ், வேணுகோபால் ஆகியோர் கொண்ட அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள இந்த டெசோ மாநாட்டுக்கு 8 ஆயிரம் பேர் வருவார்கள் என்று முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், எவ்வளவு பேர் வருவார்கள் என்று அரசு கேட்டிருந்த தகவல் இன்னும் கிடைக்கவில்லை.

அதே நேரத்தில் தி.மு.கவின் முரசொலிப் பத்திரிகையில் ஒரு இலட்சம் பேர் வருவார்கள் என்றும் பெருமளவில் வாகனங்கள் வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நவநீத கிருஸ்ணன் சுட்டிக்காட்டினார்.

மேலும் மாநாடு நடத்த திட்டமிட்டுள்ள மைதானத்திற்கு எதிரே மருத்துவமனை இருப்பதனால் அங்கு வரும் நோயாளிகளுக்கு இடையூறு ஏற்படவும் வாய்ப்புள்ளது.

அதனால் சென்னையில் மாநாடு நடத்த தமிழக அரசு அனுமதிக்கப் போவதில்லை என்று வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஆனால், டெசோ அமைப்பின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், நகர காவல்துறை விதிகளின் கீழ், தனியார் மைதானத்தில் மாநாடு நடத்த காவல்துறையிடம் அனுமதி பெறத் தேவையில்லை என்று சுட்டிக்காட்டினார்.

ஒலிபெருக்கிகளை பயன்படுத்துவதற்காகத்தான் அனுமதி கோரியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து மாநாட்டுக்கு அனுமதி வழங்குவது குறித்து சென்னை நகர காவல் துறை ஆணையர் இதைப் பரிசீலித்து பொருத்தமான முடிவை எடுக்கலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### ஈழத்தைக் கைவிட அறிவுரை

இதனிடையே டெசோ மாநாட்டின் தலைப்பில் ஈழம் என்ற வார்த்தையை பயன்படுத்தக் கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத் துறையின் துணைச் செயலாளர் ஆர்.கே. நாக்பால் டெசோ மாநாட்டு அமைப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில்,

உத்தேச சர்வதேச மாநாட்டுக்கு அனுமதி அளிப்பதில் அரசியல் ரீதியாக இந்த அமைச்சகத்துக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் இந்த மாநாட்டின் தலைப்பில் இருந்து ஈழம் என்ற வார்த்தையை கைவிட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-11)

# கருணாநிதியின் டெசோவை...

இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்காகவே இந்த மாநாடு நடைபெறுகின்றது.

இதனைப் புரிந்து கொள்ளாமல் பேசுவது கவலையைத் தருகிறது என்று அவர் கூறியிருந்தார்.

இலங்கை அரசின் அறிக்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தோர் கடந்த புதன்கிழமை இரவும், வியாழக்கிழமை காலையும் ஆலோசனையில் ஈடுபட்டனர். அதில் மாநாட்டில் பங்கேற்பதில்லை என முடிபு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மொத்தம் 5 கட்சிகள் உள்ளன. இதில் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய 5 கட்சிகளுமே மாநாட்டில் பங்கேற்கப் போவதில்லை என முடிபு எடுத்துள்ளதாக சிறிதரன் எம்.பி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினுடைய நெருக்கடி காரணமாக இந்த முடிவை தாம் எடுக்கவில்லை எனவும், தமிழக கட்சிகளின் ஒற்றுமையின்றி இந்த மாநாடு நடத்தப்படுவதனாலேயே நாம் இந்த மாநாட்டை தவிர்க்கின்றோம் எனவும் குறிப்பிட்டார்.

தமிழக ஆட்சி தனது அதிகாரத்தின் கீழ் இருந்த காலத்தில் ஈழத் தமிழர் விடயத்தில் கருணாநிதி காட்டிய பாராமுகமும் இந்த மாநாட்டு சமூகத்தில் இருந்து கூட்டமைப்பு விலக காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை டெசோ மாநாட்டு ஏற்பாட்டாளர்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு சில எம்பிகளுக்கு மாத்திரமே மாநாட்டு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் டெசோ மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என நேற்று முன்தினம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சுப்பிரமணிய சுவாமியின்...

மறைந்து சமாதானம் நிலவி வருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஆனால் இலங்கையின் அதிகார பரவலாக்கல் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் பல பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபோது பகிரங்கமாகவே இலங்கை தமிழர்களுக்கு அதிகார பரவலாக்கல் தேவையில்லை எனக் கூறியவர் இந்த சுப்பிரமணியன் சுவாமியே.

அது மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு எதிராக பல கருத்துக்களை அவ்வப்போது உளறிக் கொண்டு இருப்பது இவரது பொழுதுபோக்காக இருந்தது.

கடந்த முறை இவர் இலங்கைக்கு வந்திருந்தபோது இவரை பல தமிழ்த் தலைவர்கள் சந்தித்து தமிழ் மக்களின் அதிகார பரவலாக்கல் சம்பந்தமாக பேசியதாக ஊடகங்களுக்கு அறிக்கைகளையும், அவரைச் சந்தித்த புகைப் படங்களையும் வெளியிட்டு இருந்தன.

அத்தருணத்தில் சுப்பிரமணிய சுவாமி ஒரு அரசியல் கோமாளி என்றும் அவரைச் சந்திப்பதில் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லையெனவும் நான் தெரிவித்திருந்தேன்.

அதற்கு சுப்பிரமணிய சுவாமியா? அல்லது நானா? அரசியல் கோமாளி என என்னைப் பலர் இணையத்தளங்கள் மூலமாக விமர்சனம் செய்திருந்தனர்.

இருப்பினும் சுப்பிரமணியசுவாமி இலங்கையில் வந்து பேசியிருக்கும் பேச்சுக்களைப் பார்க்கும்போது அவர் தமிழ் மக்களுக்கும் அதிகார பரவலாக்கலுக்கு எதிரானவர் என்பது தெட்டத்தெளிவாகப் புரிகிறது. ஆகவே அவர் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியத் தமிழர்களுக்கும் எதிரானவரே.

இதைச் சென்ற முறை அவர் வந்தபோது அவரை மதித்து அவருடன் பேச்சுவார்த்தை செய்த தமிழ்த் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (ந-11)

# இலங்கைக்கு உதவ...

ஆப்கானிஸ்தான், கமரூன், கொலம்பியா, கொங்கோ, எதியோப்பியா, மடகஸ்கார், சூடான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு உதவியளிக்கப்படவுள்ளது.

மிகவும் அத்தியாவசியமான மனிதாபிமான தேவைகளை பூர்த்திசெய்யும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இன்னமும் பல மில்லியன் மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகார அவசர நிவாரணப் பிரிவு இணைப்பாளர் வெலரி அமோஸ் தெரிவித்துள்ளார். (ந-11)


ஆட்போட், ஆட்பேப்பர், ஸ்ரிக்கர், கொங்கொங் போட், தாள்களில், கலர் பிறிண்.

A5,A4,A3,B5.B4,4x6,12x18

அளவுகளில் வேண்டியபிரதிகள்

விசிட்டிங் காட், Letter Pad, சான்றிதழ்கள்

துரிதகதியில் துள்ளியமான பதிப்புக்கு

கொழும்பு டிஜிற்றல் இமேஜ்

0771974875


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org